இளையாத்தக்குடி ஒக்கூர்

அருள்மிகு கைலாச விநாயகர் திருக்கோவில்




கும்பாபிஷேக மலர்

21 - 6 - 2004

உ
சிவமயம்

இளையாத்தக்குடி ஒக்கூர்

அருள்மிகு கைலாச விநாயகர் திருக்கோவில்



கும்பாபிஷேக மலர்

21-6-2004



அருள்மிகு கைலாச விநாயகர்

ஊரணி பராமரிப்பு பணிகள்













உ
சிவமயம்

தன் கடன் அடியேனையும் தாங்குதல்
என் கடன் பணிசெய்து கிடப்பதே

தவத்திரு
குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்

குன்றக்குடி - 630 206
சிவகங்கை மாவட்டம்
✆ : 04577 -264227
-264466

வாழ்த்துரை

திரைகடலோடித் திரவியம் தேடி அரனடிக்கே அன்பராகி ஆலயத் திருப்பணிகள் செய்த பெருமக்கள் நகரத்தார் பெருமக்கள். அதுமட்டுமின்றித் தமிழகத்தை ஆண்ட மன்னர்களுக்குப் பின் வணிகர் குல திலகங்களாகிய நகரத்தார்கள் விண்முட்டும் கோபுரங்கள் ஓங்கி நிற்கும் திருக்கோயில்களை எடுத்தும் புதுப்பித்தும் தமிழர்தம் சமயத்தையும் கலைகளையும், பண்பாட்டையும் காத்த பெருமையுடையவர்கள் ஆவர்.

அத்தகு நகரத்தார்களின் ஒன்பது திருக்கோயில்களில் முதன்மைக் கோயிலெனப் போற்றப் பெறும் திருக்கோயில் அமைந்துள்ள இளையாற்றங்குடியில் ஒக்கூர் அருள்மிகு கைலாச விநாயகர் கோயில் திருக்கோயில் திருப்பணி நிறைவேறி 21–6–2004இல் திருக்குட நன்னீராட்டு விழா இனிதே நிறைவெய்தியது. இவ் விழாவை முன்னிட்டு திருக்குட நன்னீராட்டு விழா மலர் வெளியிடுவதறிந்து மிக்க மகிழ்ச்சி. மலர் கருத்து மணம் பரப்பி மலரவும். இதன் தொடர்பாகப் பணி செய்த அன்பர்கள் அனைவரும் அருள்மிகு கைலாச விநாயகர் திருவருளால் எல்லா நலமும் வளமும் பெற்று நீடு வாழவும் வாழ்த்துகின்றறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு.

(பொன்னம்பல அடிகளார்)

உ

சிவமயம்

கோவிலூர் மடாலயம்
கோவிலூர் – 630 307
(வழி – மானகிரி)
சிவகங்கை மாவட்டம்.

✆ 436846



நாள் : 28-08-2004

கோவிலைத் தழுவிய குடிகளாக வாழ்பவர்கள் நம் நகரத்தார் பெருமக்கள்.

திரைகடல் ஓடிக் கொண்டு வந்த செல்வத்தால் ஆண்டவனுக்கு ஆலயம் அமைத்தவர்கள் நம் நகரத்தார் பெருமக்கள். மன்னர் பின்னோர் என்று அழைக்கப்படும் நம்முடைய வைசியப் பெருமக்கள் கலைகளை வளர்ப்பதிலும், கவின்மிகு சைவத்தை வளர்ப்பதிலும், கண்ணாகிய தமிழ் மொழியைக் கருத்தாகப் போற்றுவதிலும் மன்னர் பின்னோராகவே விளங்கினர்.

அறுபான் மும்மை நாயன்மாருள் ஐந்து நாயன்மார்கள் நம்மினத்தைச் சார்ந்தோர் என்ற பெருமை நமக்கு உண்டு. இத்தகைய வரலாற்றுச் சிறப்புடைய நம் நகரத்தார் ஒன்பது கோவிலைச் சார்ந்த குடிகளாக வாழ்கின்றார்கள். அவற்றுள் ஒன்று அண்மையில் திருக்குட நீராட்டு விழாக் கண்ட அருள்மிகு நித்திய கல்யாணி உடனாய கைலாசநாதர் அருள் புரியும் இளையாத்தங்குடிக் கோவிலும் ஒன்று. இக்கோவிலைச் சார்ந்த ஏழு பிரிவினர் தமக்கென ஒரு பிள்ளையார் கோவிலும் குளமும் அமைத்து வழிபடும் சிறப்பு உடையோர். அவர்களுள் ஒரு பிரிவினர் ஒக்கூருடையார். அவர்கள் அண்மையில் தம்முடைய கைலாச விநாயகர் ஆலயத்தைப் புதுப்பித்துத் திருக்குட நீராட்டு விழாக் கண்டு வேழ முகத்தான் அருளுக்கு இலக்காகி உள்ளனர். ஒரு தலைக்கு மறு தலை தருகிறோம் என்று சொன்ன உறுதிக்காக இன்றளவும் நகரக் கோவில்களில் முதல் மரியாதை பெற்று வரும் இவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். ஒக்கூராருடைய கைலாச விநாயகரின் திருக்குட நீராட்டு விழாவை ஒட்டி ஒரு மலர் வெளியிடுவது அறிந்து மகிழ்ந்தோம். அம்மலர் சிறக்கவும் ஒக்கூருடைய நகரத்தார் உயர்ந்தோங்கவும் எல்லாம் வல்ல கோவிலூர் அருள்மிகு திருநெல்லை உடனாய கொற்ற வாளீசர் திருவடிகளையும், எம் குருமுதல்வர் ஆகிய ஆண்டவர் திருவடிகளையும் வணங்கி வாழ்த்தி மகிழ்கிறோம்.

ஸ்ரீ சற்குருநாதன் துணை

உ

சிவமயம்

ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் துணை

நாட்டுக்கோட்டை நகரத்தார் உபதேசகுருபீடம்

பாண்டியநாட்டு முதன்மை ஈசான சிவாச்சாரியார்

ஸ்ரீலஸ்ரீ ரவீந்திரர் (எ) காமாட்சி சுந்தர சுவாமிகள் M.A.,

தர்க்க வேதாந்த வித்வான் ப்ரவீண்

பாதரக்குடி – மானகிரி அஞ்சல் 630 185

காரைக்குடி வட்டம். சிவகங்கை மாவட்டம்–Ph : 236185

அன்புள்ள,

இளையாற்றங்குடி நகரத்தார்களுக்கு ஸ்ரீ மீனாட்சி சுந்தரேசுவரர் திருவருளால் சகல நன்மைகளும் உண்டாவதாக ஆசீர்வாதம்.

இப்பவும் இளையாற்றங்குடியில் தங்கள் பிரிவினரின் பிள்ளையார் கோவில் திருப்பணிகள் சிறப்பாக நடைபெற்று கும்பாபிஷேகமும் மிகச் சிறப்பாக நடைபெற்றதைக் கண்டு மிக்க மகிழ்ச்சியடைந்தோம்.

தந்தையாருக்குக் கூட ஒரு ஆலயம் தான் அமைந்துள்ளது. பிள்ளையாருக்குப் பல ஆலயங்களில் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. இதுவே பிள்ளையாரின் பெருமைக்குச் சான்று.

இதற்குக் காரணம் பிள்ளையாரின் எளிமையே. ஒரு ஆலமரமோ அரசமரமோ கிடைத்தால் போதும் பிள்ளையார் வந்து அமர்ந்து விடுவார். இருப்பினும் அவர் பெரிய இடத்துப் பிள்ளையல்லவா எனவே நகரத்தார்கள் அவருக்குப் போட்டி போட்டுக் கொண்டு திருப்பணி செய்துள்ளார்கள்.

வேற்றுமையில் ஒற்றுமை. பிரிவினையில் பெரு முன்னேற்றம் இதுவே இந்து மதத்தின் தனிச்சிறப்பு. வாழ்க இந்து சமயம் வாழ்க நகரத்தார் பெருமக்கள். வாழ்க அவர்களின் நற்பணிகள்.

ஸ்ரீ மீனாட்க்ஷி சுந்தரேஸ்வரர் துணை

876

ஸ்ரீ மீனாட்சி சுந்ரேசுவரர் துணை

உ

சிவமயம்

His Holiness

Sri la Sri Nerambalagiya Desikar @
Gnanaprakasa Desika Paramachariya Swamigal

MADATHIPATHI - THULAVUR MADAM

KUNNAKKUDI - Via (Sivaganga Dt) Pin : 630 206. Tamilnadu.

ஸ்ரீலஸ்ரீ நிரம்ப அழகிய தேசிகராகிய ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்
மடாதிபதி, துலாவூர் மடம்.

தாரண வருஷம் ஆனி மாதம் 5உ தாரண நாள் : **19.6.2004**

வாழ்த்துரை

இளையாத்தக்குடி ஒக்கூர் ஸ்ரீ கைலாச விநாயகர் திருக்கோவில் திருப்பணிகள் நிறைவுபெற்று புதுப் பொலிவுடன் மிளிர்கிறது. நிகழும் தாரண ஆண்டு ஆனித் திங்கள் 7 ஆம் நாள் (21–6–04) திங்கள்கிழமை மஹாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவும், விழாமலர் சிறப்பாக அமையவும் திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

விநாயகர் என்றால் தமக்குமேல் நாயகர் இல்லாதவர், சிறந்த தலைவர் என்று பொருள். ஸ்ரீ கைலாச விநாயகர் பக்தர்கள் வேண்டுவார் வேண்டும் வண்ணம் அருள்பாலித்து வருகிறார். இவ்விழாவினைப் பொறுப்பேற்று நடத்துவோர்களுக்கும், கலந்த கொண்டு வழிபடுவோர்களுக்கும், பக்தர்களுக்கும் மெய்யன்பர்களுக்கும், இம்மை மறுமை வளங்கள் நிறைவுற எய்தும் பொருட்டு திருவருளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

ஸ்ரீ நிரம்ப அழகிய ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் 19–6–04

நீதியரசர்

மெ. சொக்கலிங்கம்

28, கிரீன்வேஸ் சாலை,
சென்னை 600 028.

வாழ்த்துச் செய்தி

இறை நம்பிக்கையும் தர்மத்தையும் இரு கண்களாகக் கொண்ட செட்டிநாடு தன வணிகர் தரணியில் தகைமை பெற்று இணையற்று விளங்குமாறு தாயினும் சாலப்பரிந்து காக்கும் எங்கும் நிறை அருள்மிகு நித்திய கல்யாணி அம்பாள் உடனுறை கைலாச நாதர் கோவில் கொண்டு அருளும் இனிய நகர் இளையாற்றங்குடி என்பதும், தலம், மூர்த்தி, தீர்த்தம் ஆகிய மூன்றும் சிறப்பாக அமையப் பெற்ற திருத்தலம் என்பதும் யாவரும் அறிந்ததே.

ஏழு பிரிவுகளைக் கொண்டுள்ள இளையாற்றங்குடி கோவில்களில் முதல் பிரிவு என்ற பெருமையும் நகர் கோவில்கள் அனைத்திலும் முதல் மரியாதைக்கு உரியவர்களாய் இளையாற்றங்குடி ஒக்கூர் நகரத்தார்கள் சிறப்பினை பெற்றவர்கள். பிரளயம் என்னும் சித்திர வேலைப்பாடகளோடு கூடிய குடிநீர் தடாகத்தை அமைத்து அவர்கள் அதே காலத்தில் அருள்மிகு கைலாச விநாயகப் பெருமானுக்கு கவினுறும் ஆலயமும் அமைத்தார்கள்.

மேற்படி ஆலயத்தில் 21.6.2004 திங்கள் அன்று இனிய முறையில் சிவநேச செல்வர்களும் மெய்யன்பர்களும் பேரின்ப பெறு வாழ்வு பெறும் வண்ணம் இனிய முறையில் திருக்குட நன்னீராட்டு விழா நடைபெற்றது.

மேற்படி கும்பாபிஷேகக் குழுவிற்கு தங்கள் வாழ்க்கையில் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஆன்மீகத்திற்காகவும், பல திருக்கோவில்களில் நற்காரியங்களுக்காவும் செயற்பட்டு வரும் திரு. மெ.செ.ராம. மெய்யப்ப செட்டியார் அவர்கள் தலைவர் என்பது ஸ்ரீ கைலாச விநாயகரின் திருவருளேயாகும்.

சென்னையில் மயிலையில் லஸ்ஸில் உள்ள நவசக்தி விநாயகர் ஆலயத்திற்கும் தற்போதைய அறங்காவலர் குழு தலைவராக மேற்படியார் பணி செய்து வரும் காலத்தில் இளையாற்றங்குடி கைலாச விநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேக குழுவிற்கு அவர்கள் தலைவராக இருந்து சிறப்பாகச் செயலாற்றி கும்பாபிஷேகம் நடைபெற்று இருப்பது அவர்கள் இறையுணர்வையும் எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் அவர்கள் பால் கொண்டுள்ள கருணையையும் காட்டுகிறது.

மேற்படி கும்பாபிஷேகத்தையொட்டி மலர் ஒன்று வெளியிட இருக்கும் செய்தி நிறைந்த மகிழ்வு தருவாதாக அமைந்திருக்கிறது. அந்த மலர் விநாயக சதுர்த்தி அன்று விழா ஒன்றில் வெளியிட இருப்பது இன்னும் பெருமைச் சேர்க்கிறது.

மேற்படி கோவிலின் வளர்ச்சி மற்றும் திருப்பணி ஆகிய தெய்வீக தர்மங்களில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ள திருப்பணி குழுவினரும் மற்றும் நிதி கொடுத்தும் மற்றும் வெவ்வேறு விதமாகவும் உதவிய பக்த கோடிகள் அனைவரும் பாராட்டுதற்கு உரியவர்கள். கும்பாபிஷேகம் கண்டுள்ள ஸ்ரீ கைலாச விநாயகப் பெருமான் தன் கருணையை கங்கையாக வாரி வழங்கி பதினாறு பேறும் எல்லோருக்கும் தந்தருள அவர் பொற்பாதங்களை தலைமேற் கொண்டு வணங்குகிறோம்.

நீதியரசர் மெ. சொக்கலிங்கம்
மற்றும் துணைவியார்



அருள் தருவார் ஸ்ரீ கைலாச விநாயகர்!

இளையாற்றங்குடி கோயிலார் அனைவரும் கைலாசநாதர் – நித்யகல்யாணி அம்மன் திருக்கோயிலைக்குலமரபுக் கோயிலாகக் கொண்டு வழிபட்டு வந்தாலும், அக்கோயிலாரில் உள்ள ஏழு பிரிவினரும் இளையாற்றங் குடியில் தனித்தனிக் கோயில் கட்டியும் ஊருணிகள் வெட்டியும் சிறப்புற பராமரித்து வருகின்றனர். அந்த வகையில் ஒக்கூர் பிரிவு நகரத்தார் பெருமக்கள் தங்களின் முன்னோர்கள் கட்டிவைத்த ஸ்ரீ கைலாச விநாயகர் திருக்கோயில் திருப்பணிகள் செய்து குடமுழுக்க விழாவினை கடந்த 21.06.2004 ஆம் நாள் சிறப்புற நடத்தி கைலாசவிநாயகரின் அருளைப் பெற்றுள்ளனர் என்பதில் எனக்கு மகிழ்ச்சி! மன்னோர் பின்னோரான நாம் நம் மரபுகளை, கலாச்சாரத்தைக் கட்டிக் காப்பதில் முக்கியமான ஒன்று ஆலயத்திருப்பணி. அப்பணியை ஒக்கூர் பெருமக்கள் சரியாகவும், சிறப்பாகவும் செய்திருக்கிறார்கள்.

“விநாயகனே வல்வினையை வேரறுக்க வல்லான்” – என்று பதினோராம் திருமுறை கூறுகிறது. பக்தனின் வினைகளைப் போக்கும் சக்தி கொண்டவன் விநாயகப் பெருமான் தான் என்பது மகாரிஷிகளும், மாமுனிவர்களும் ஒப்புக்கொண்டு உலகுக்கு உணர்த்தியிருக்கிறார்கள்.

பக்தர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு இறைவனை வேண்டி வேள்வியும், தவமும் இயற்றுவார்கள். அவ்விறைவர்களின் அருளைப் பெறுவதற்கும் பக்தர்களின் முன்னே இறைவன் தோன்றுவதற்கும் ஏக காலங்கள் ஆகும். ஆனால் தன்னை வேண்டித் தவமியற்றுவோர்க்கு சடுதியில் அருள் வழங்கும் வல்லான் விநாயப் பெருமானே என்று வேதங்கள் எடுத்து இயம்புகின்றன.

அத்தகையை வல்லான் கைலாச விநாயகப் பெருமானுக்கு குடமுழுக்கு விழாவை நடத்தி ஒக்கூர் பிரிவு நகரத்தார்கள் அவனருளைப் பெற்றிருக்கிறார்கள், என்பதே எனக்குப் பெருஉவகை தருகிறது.

இந்தத் திருப்பணிகள் சிறப்புற நடைபெறவும், குடமுழுக்கு விழா ஆகம விதிகளோடு புனிதமாக நடைபெறவும் பெரிதும் காரணமாக இருந்த நண்பர்களை நான் வாழ்த்துகிறேன். இறைப்பணியாற்றுவதே இந்த ஜென்மத்தில் கிடைத்த புண்ணியம் என்று கருதுபவன் நான்.

அந்த வகையில்,

ஓஷியானிக் எம்.எஸ்.ஆர்.எம். மெய்யப்ப செட்டியார் அவர்களைக் விழாத் தலைவராகக் கொண்டு ஒன்றிணைந்து பணியாற்றிய அத்தனை உள்ளங்களையும் வாழ்த்துகிறேன்.

தன்னை வேண்டுவோர் எல்லோருக்கும் அருள் தருவார் ஸ்ரீ கைலாச விநாயகர் என்பது திண்ணம்.

அனைவருக்கும் என் இதய வாழ்த்துக்கள்.

வாழ்த்துக்களுடன்,
வி.என்.சிதம்பரம்



Off : 28523561
28523392
28522969
Res : 24838739

National Confederation of Bank Employees

L. Balasubramanian
President

763, Anna Salai,
Chennai - 600 002.

திரு. அழ. மீனாட்சிசுந்தரம் அவர்கள்,

வணக்கம். நலம் நலமே மலர்க. தாங்கள் அனுப்பிய இளையாத்தங்குடி ஒக்கூர் அருள்மிகு கைலாச விநாயகர் திருக்குட நன்னீராட்டு பெருவிழா அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றேன் மிக்க மகிழ்ச்சி.

எங்களது தொழிற்சங்கத்தின் 31வது அகில இந்திய மாநாட்டு வேலைப்பளு காரணமாக மேற்படி திருக்குட நன்னீராட்டு விழாவில் கலந்து கொண்டு சிறப்பிக்க இயலவில்லை.

மேற்படி கைலாச விநாயகர் திருக்குட நன்னீராட்டு பெருவிழா சிறப்புடன் நடைபெற அந்த எல்லாம் வல்ல கைலாச விநாயகரின் அருளை வேண்டுகிறேன்.

தங்கள் அன்புள்ள,
(லெ. பாலசுப்பிரமணியன்)
தலைவர்

கும்பாபிஷேக குழு



தலைவர்
மெ.செ.ராம. மெய்யப்பன்



துணை தலைவர்
சா.லெ.நா.சா. நாராயணன்



துணை தலைவர்
கண. முத்து பழநியப்பன்



செயலர்
மெ.நா.சித. நாகப்பன்



துணை செயலர்
M.மோகன்



துணை செயலர்
வயி. நாராயணன்



பொருளாளர்
அழ.சு.விஸ்வநாதன்

கும்பாபிஷேக மலர் குழு



தலைவர்
மெ.செ.ராம. மெய்யப்பன்




துணை தலைவர்
சோம. சிவபிரகாசம்



துணை தலைவர்
சா.லெ.நா.சா. நாராயணன்



துணை தலைவர்
கண. முத்து பழநியப்பன்



அரு. ராம. சொக்கலிங்கம்



துணை தலைவர்
கி.பழ.கி. பழநியப்பன்



துணை தலைவர்
சுப.ராம. சுப்பையா



துணை தலைவர்
முரு. அழகப்பன்



செயலர்
மெ.நா.சித. நாகப்பன்


கும்பாபிஷேக மலர் குழு



துணை செயலர்
M. மோகன்



துணை செயலர்
வயி. நாராயணன்



துணை செயலர்
சொ. சொக்கலிங்கம்



துணை செயலர்
வெ.ராம. வெங்கடாசலம்



துணை செயலர்
அன. தமிழரசு



பொருளாளர்
அழ.சு. விஸ்வநாதன்




டிரஸ்டிகள்




ராம. செல்லப்பன்



லெ. லெட்சுமணன்



அரு. ராம. சொக்கலிங்கம்



பெரி.லெ.வெ.சொ.செ.
சொக்கலிங்கம்



வெ.ராம. வெங்கடாசலம்



மெ.செ.ராம. மெய்யப்பன்



கி. பிச்சப்பன்



சா.லெ.நா.சா. நாராயணன்



மெ.நா.சித. நாகப்பன்


டிரஸ்டிகள்



வெ.அ. வெங்கடாசலம்



அழ. மீனாட்சிசுந்தரம்



ராம.சுப. ராமனாதன்



முரு. அழகப்பன்



கி.பழ.கி. பழநியப்பன்



M. மோகன்



கண. முத்துபழனியப்பன்



அ.பழ. அண்ணாமலை



ராம. அருணாசலம்

டிரஸ்டிகள்



து.க.சொ. முத்துராமன்



அண. தமிழரசு



வீர. கிருஷ்ணன்



சோம. சிவப்பிரகாசம்



அ.கரு.பழ.சோம. ராமசாமி



அழ.சு. விஸ்வநாதன்



வயி. நாராயணன்



சு.ராம. சுப்பையா



வெ. பழநியப்பன்
மேனேஜர்



ஒக்கூர் விடுதி



ஒக்கூர் விடுதி வெளித்தோற்றம்

ஊரணியின் எழில்மிகு தோற்றம்









யாகசாலை நிகழ்ச்சிகள்













யாகசாலை நிகழ்ச்சிகள்















யாகசாலை நிகழ்ச்சிகள்










நன்றியும் வணக்கமும் உரியன

எம்.எஸ்.ஆர்.எம். மெய்யப்பன்
தலைவர், திருப்பணிக்குழு
குடமுழுக்கு விழா மலர்க்குழு

கடவுளைப் போலவே கவிஞர்களும் படைப்பாளிகளாக இருக்கிறார்கள். அதனால் தானோ அவர்கள் வாக்குக்கும் வன்மை ஏற்பட்டு விடுகிறது.

நகரத்தார் சமூகத்தில் கவிதைத் துறையில் பலர் முத்திரை பொறித்திருக்கிறார்கள். அவர்களில் முன்னோடியாகத் திகழ்ந்தவர் பாடுவார் முத்தப்ப செட்டியார் ஆவார்கள்.

அவர்களது கவிதை வயிரங்களில் ஒன்று.

இங்கிலீஷ் கொடி பறக்கவே
இளையாத்தக்குடி சிறக்கவே

என்பதாகும்.

உலக அரங்கில் எத்தனை மாற்றங்கள் ஏற்பட்டாலும் இன்னும் பிரிட்டிஷ் கொடி பறந்து கொண்டுதான் இருக்கிறது.

அதைப் போலவே, இன்னும் சொல்லப்போனால் மேலும் ஒருபடி சிறப்பாகவே இளையாத்தக்குடிக் கோயிலின் புகழ்வானளவும் உயர்ந்து விளங்குகிறது.

பாடுவார் முத்தப்ப செட்டியார் அவர்களின் கவிதை வரிகளில் இடம் பெற்று இளையாத்தக்குடி இலக்கியமாகவும் வரலாறாகவும் எழில் பெற்றுவிட்டது.

நகரத்தார் கோயில் பிரிவின் தோற்றம் இளையாத்தக்குடியிலிருந்தே தோன்றியது என்பதும் பிள்ளையார்பட்டியாரும் இரணிக்கோயிலாரும் இக்கோயிலிலிருந்து சென்றவர்களே என்பதும் வரலாற்று உண்மைகளாக விளங்குகின்றன.

இந்தியாவின் பெருமையைக் காண வேண்டும் என்றால் இந்தியக் கிராமங்களைக் காணுங்கள் என்று காந்தியடிகள் சொன்னார்கள்.

நகரத்தார் பெருமையை, பெருமிதத்தை வரலாற்றை, வாழ்வின் சிறப்பை காண வேண்டுமென்றால் இளையாத்தக்குடிக்கு வாருங்கள் என்று சொல்லும் வண்ணம் அந்த ஆலயமும் ஊரும் ஊருணிகளும் அமைப்பும் காஞ்சிப் பெரியவர்கள் வந்து களித்துச் சிறந்து, நிலை பெற்ற இடமும் இன்னபிறவும் விளங்குகின்றன.

இளையாத்தக்குடி வரலாற்றுக்கு மட்டுமல்லாமல் நகரத்தார் வரலாற்றுக்கும் இது ஒரு எடுத்துக்காட்டாக மலர்ந்துள்ளது.

நகரக் கோயில்கள் ஒன்பதிலும் விபூதிப் பிரசாதம் வழங்கும் போது முதல் மரியாதையாக "இளையாத்தக்குடி ஒக்கூருடையார்" என்று அழைத்து முதல் காளாஞ்சி கொடுப்பது இன்றும் நகரத்தார் கடைப்பிடித்து வரும் மரபாகும். அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

இளையாத்தக்குடி ஏழு பிரிவுகளில் ஒன்றான ஒக்கூர் பிரிவு நகரத்தார்களுக்குச் சொந்தமான ஸ்ரீ கைலாச விநாயகர் ஆலயமும், "பிரளயம்" என்று அழைக்கப்படும் அழகான ஊருணியும் மெயின் ரோடில் அமைந்துள்ள வசதிகள் நிறைந்த விடுதியும் இளையாத்தக்குடிக்கு மேலும் பெருமையும் சிறப்பும் சேர்க்கின்றன.

இவற்றின் திருப்பணிக்குழுத் தலைவராகவும், ஸ்ரீ கைலாச விநாயகர் ஆலயக் குடமுழுக்கு விழா மற்றும் மலர்க்குழுத் தலைவராகவும் பணியாற்றும் பெரும் றொுப்பை ஒக்கூருடையார் மனம் உவந்து எனக்குத் தந்தார்கள். சிதம்பரத்தில் "மெ.செ.வித்யா சாலை" என்ற அறக்கட்டளையை 100 ஆண்டுகட்கு முன்பு நிறுவி ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு பல உபயங்களைச் செய்து வரும் காரைக்குடி மெ.செ. குடும்பத்தைச் சேர்ந்தவன் என்பதாலும், சென்னையில் வரலாற்றுச் சிறப்புமிக்க மயிலையில், வணிகச் சிறப்புமிக்க லஸ்லில் எழுந்தருளி வேண்டுவோர்க்கு வேண்டுவன எல்லாம் தரும் அருள்மிகு நவசக்தி விநாயகர் ஆலயத்தின் அறங்காவலர் குழுத்தலைவர் என்பதாலும், வட சபரி என்று அழைக்கப்படும் சென்னை ராஜா அண்ணாமலைபுரம் ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலய அறங்காவலர் என்பதாலும் ஒக்கூர் நகரத்தார்கள் இந்தப் பொறுப்பை எனக்குத் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன். இதை வாழ்நாளில் நான் பெற்ற பெறும்பேறாகக் கருதுகிறேன். இளையாத்தக்குடி ஒக்கூர் நகரத்தார்களுக்கு உண்மையிலேயே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இளையாத்தக்குடி ஒக்கூருடையாருக்குச் சொந்தமான விடுதி முற்றிலும் மராமத்து செய்யப்பெற்று, "பிரளயம்" என்று அழைக்கப்படும் அழகான ஊருணி சான்ட் பிளாஸ்டிங் செய்யப்பெற்று, ஸ்ரீ கைலாச விநாயகர் ஆலயத் திருப்பணிகள் சிறப்பாக நிறைவு பெற்று குடமுழுக்கு விழாவும் 21.6.2004 ம் நாள் திங்கட்கிழமைக் காலை மிகவும் சிறப்பாக நடைபெற்றது. குடமுழுக்கு விழாவில் ஒக்கூருடையாரும் மற்ற பிரிவு மற்றும் பிற கோயிலைச் சேர்ந்த நகரத்தார்களும் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திருப்பணிகளும், குடமுழுக்கு விழாவும் சிறப்பாக நடைபெற உதவிய அனைத்து உபயதாரர்களுக்கும், ஆலய அர்ச்சகர்களுக்கும், விடுதிச் சிப்பந்திகளுக்கும், திருப்பணிக் குழுவினருக்கும், குறிப்பாக எனது வலதுகரம் போல் செயல்பட்ட செயலாளர் திரு.எம்.என். எஸ்.டி. நாகப்பன் அவர்களுக்கும், சர்வ சாதகமாகப் பொறுப்பேற்று குடமுழுக்கு விழாவைச் சிறப்பாக நடத்தித் தந்த பிள்ளையார்பட்டி டாக்டர். பிச்சை சிவாச்சாரியார் அவர்களுக்கும், பெரிய கோயில் அறங்காவலர்களுக்கும், மொத்தத்தில் திருப்பணி மற்றும் குடமுழுக்கு விழாவில் பங்கு கொண்ட அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருளும், எழிலும் கொண்ட இளையாத்தக்குடி விழா மலரும் அழகும், இலக்கிய மணமும் பெற்று போற்றத்தக்க வகையில் மலர்ந்துள்ளது. இதற்கு உதவிய அனைவருக்கும். குறிப்பாக மலர்க் குழுவினருக்கும் என் நன்றியும் வணக்கமும்.

நகரத்தார் பெருமக்கள் எல்லோரும் எல்லாநலமும், வளமும், மகிழ்வும் மன நிறைவும் பெற எல்லாம் வல்ல ஸ்ரீ கைலாச விநாயகரை வேண்டுகிறேன்.

உ
சிவமயம்

அன்பிற் சிறந்த பங்காளி பெருமக்களே! பெரியோர்களே! அன்புள்ளம் கொண்ட தாய்மார்களே வணக்கம்

நம் இளையாத்தக்குடி ஒக்கூர் ஸ்ரீ கைலாசவிநாயகர் ஆலய கும்பாபிஷேகம் தாரணஆண்டு ஆனிமாதம் 7ம் தேதி 21-6-2004 திங்கள்கிழமை மிக சீரோடும் சிறப்போடும் நடந்தேறியது. நம் ஒக்கூர் விடுதி நல்ல முறையில் புதுப்பிக்கப் பெற்று எழில் பெற்று திகழ்கிறது. நம் ஒக்கூர் பிரளய ஊரணி வேலைகள் பார்க்கப்பெற்று புதுப் பொலிவோடு திகழ்கிறது. ஊரணியை பாராட்டாதவர்களே கிடையாது. இளையாத்தக்குடிக்கே வற்றாத குடிநீர் தந்து கொண்டிருப்பது நம் கைலாசவிநாயகரின் பிரளய ஊரணி என்றால் மிகையாகாது. நகரத்தார் அன்னசத்திரம், தண்ணீர் பந்தல் ஏற்படுத்துவதில் மிகவும் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள் ஏன் என்றால் உயிர்கள் வாழ இந்த இரண்டும் அதிமுக்கியம். அப்படி முக்கியம் வாய்ந்த ஊருக்கே குடிநீர் கொடுக்கும் பிரளய ஊரணியை நம் முன்னோர்கள் ஏற்படுத்தியிருப்பதில் நாம் பெருமையடைகிறோம். பிள்ளையார் கோவிலிலே வேலை ஆரம்பிக்கும் முன் கோவில் மண்டப கொடுங்கையில் கல்லால் குரங்கும், உடும்பும் இருக்கிறதே, இது வேண்டாமே, பிள்ளையார் கோவிலிலே மூஞ்சுறுதானே வைக்கவேண்டும். நந்தி இருக்கிறதே. அதை மாற்றி மூஞ்சுறுதானே வைக்க வேண்டும் என்று அபிப்பராயங்களைக் கூறினார்கள். காரணம் இல்லாமல் வைத்திருக்க மாட்டார்கள் என்று கருதி யோசிக்கும் போது பிரகாஷ் சிவாச்சாரியார், "நம் மனது குரங்கு போன்றது. தாவிக் கொண்டே இருக்கும். ஆகவே குரங்கு போன்று தாவும் மனதை கோயிலுக்கு வெளியே விட்டு விட்டு உள்ளே சென்று இறைவனை உடும்பு போல் பற்றிக் கொள்ள வேண்டும்" என்ற கருத்தில் வைத்திருக்கிறார்கள்," என்றார். என்ன ஓர் அற்புதமான கருத்து!! சரி, நந்தியை எடுத்து விட்டு மூஞ்சுறு மாற்றலாம் என்று கைலாச விநாயகரிடம் பூக்கட்டிக் கேட்டால், அவர் நந்தியே இருக்கட்டும் என்று உத்தரவு கொடுத்தார். அப்போது தான் தோன்றியது அவர் கைலாச விநாயகரல்லவா? கைலாசத்தில் நந்தி தேவர்தானே இருப்பார். ஆகவே கைலாசமாகிய ஒக்கூர் ஸ்ரீ கைலாசவிநாயகர் ஆலயத்தில் நந்தியை வைத்திருக்கிறார்கள் என்று இப்படி ஒவ்வொன்றிலும் ஒரு தத்துவத்தை வைத்து திருப்பணி செய்திருக்கும் நம் முன்னோர்களுக்கு எனது நன்றியைக் காணிக்கை ஆக்குகிறேன்.

நம் இளையாத்தக்குடி ஒக்கூர் ஸ்ரீ கைலாசவிநாயகர் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு திருப்பணிக் கமிட்டியும், மலர்க்குழுவும் அமைக்கப்பெற்றது. திருப்பணிக் குழு

தலைவராக திரு.MSRM. மெய்யப்ப செட்டியார் அவர்களும் உப தலைவர்களாக திரு. SLNS. நாராயணன் செட்டியார் அவர்களும், திரு. முத்து பழநியப்ப செட்டியார் அவர்களும் செயலராக அடியேனும், பொருளாளராக திரு AL.S. அழகப்ப செட்டியார் அவர்களும் உதவி செயலர்களாக திரு. VE. நாராயணன் செட்டியார் அவர்களும் திரு. M. மோகன் செட்டியார் அவர்களும் மற்றும் ஒக்கூர் காரியக்காரர்கள் 26 பேரில் 19 பேர்களும் கமிட்டி உறுப்பினர்களாகவும் பொறுப்பேற்று மிகச்சிறப்பாகக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இந்த மலருக்கு ஆசியுரை வழங்கிய குரு மகாசன்னிதானங்களுக்கும், நீதியரசர் திரு. M. சொக்கலிங்கம் அவர்களுக்கும் திரு. V.N.CT. சிதம்பரம் செட்டியார் அவர்களுக்கும் மற்றும் பெரியோர்களுக்கும், திருப்பணி வேலைகள் நன்கு நடக்க ஆக்கமும், ஊக்கமும் கொடுத்தும் நிதியும் கொடுத்தும், நன்கொடைகள் வாங்குவதற்கும் கூடவே வந்திருந்து வழிநடத்திய அன்புத் தலைவர் திரு. MSRM மெய்யப்ப செட்டியார் அவர்களுக்கும், இளையாத்தக்குடிக்கே சிறப்பு ஒக்கூரின் ஊரணிதான், அதை அழகுபடுத்தி தண்ணீர் வரவழைப்பது அவசியமென்று அதற்காக தன் முழுமுயற்சியோடு பெரும் நிதியும் தந்த உப தலைவர் திரு.SLNS. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும், பலவழிகளில் யோசனைகள் கூறி ஊக்கமளித்த உபதலைவர் திரு. முத்து பழநியப்ப செட்டியார் அவர்களுக்கும், நன்கொடையும், விளம்பரங்களும் சேகரிக்க எங்களுடன் வெளியூர்களுக்கு வந்திருந்தும், நிதியும் தந்தும் பலவழிகளில் உதவிபுரிந்த உதவிசெயலர் திரு. VE. நாராயணன் செட்டியார் அவர்களுக்கும் ஸ்ரீகைலாசவிநாயகரின் கோபுரவேலைக்கான தொகையை தானே ஏற்றுக்கொள்வதாக கூறியதோடு சென்னையில் எங்களுடன் கூடவே இருந்து நன்கொடைகள் வாங்க உதவிபுரிந்த உதவி செயலர் திரு. M. மோகன் அவர்களுக்கும் எல்லா இடங்களுக்கும் நன்கொடைகள், விளம்பரங்கள் சேகரிப்பதற்கு கூடவே இருந்தும், நன் கொடைகள் விளம்பரங்கள் பெற்றுத்தந்தும் அனைத்து காரியங்களிலும் துணைபுரிந்தும் நிதியும் அளித்த பொருளாளர் திரு. ALS விஸ்வநாதன் செட்டியார் அவர்களுக்கும் கும்பாபிஷேக கமிட்டியிலேயே முதன்முதலில் நன்கொடை தருவதாக சொல்லிய பெருந்தகையாளர் தனது 76 வயதிலும் உடல் நிலையையும் பொருட்படுத்தாது இளைஞரைப் போல காலம் கருதாது எங்களை கூட்டிச்சென்று அதிக அளவில் நன்கொடையையும், விளம்பரங்களையும் வாங்கித்தந்து பல வழிகளிலும் உதவி புரிந்த பெரியவர் திரு. சோம. சிவப்பிரகாசம் செட்டியார் அவர்களுக்கும், அவர்தமது குடும்பத்தார்களுக்கும் பல நல்ல அரிய யோசனைகளை நல்கிப் பெரும் உதவி புரிந்த மலர்க்குழு உதவிச் செயலர் பெரி.லெ.வெ.சொ.சொ.செ. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கும், திருச்சியிலிருந்து விளம்பரங்கள் பெற்றுத் தந்ததோடு அவ்வப்போது

வந்து என்னோடு வேலைகளில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்த மலர்க்குழு உதவி செயலர் திரு. வெ.ராம. வெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும், கட்டிடவேலைகளை அவ்வப்போது பார்வையிட்டு உதவியாக செயல்பட்ட மலர்குழு உதவித்தலைவர் திரு. சுப.ராம. சுப்பையா செட்டியார் அவர்களுக்கும் கட்டிட வேலைகளுக்கான யோசனைகளை கூறியும், வேலைகளை இப்படித்தான் செய்ய வேண்டுமென்று நிர்ணயித்தும், கட்டிடம் புதுப்பொலிவோடு திகழ உதவிகள் செய்து நிதி உதவியும் தந்த திரு. வெ.அ. வெங்கிடாசலம் செட்டியார் அவர்களுக்கும், விளம்பரங்கள் பெற்றுத் தந்ததோடு, பலவழிகளில் உதவி புரிந்த திரு. அழ. மீனாட்சிசுந்தரம் செட்டியார் அவர்களுக்கும், பெருமளவில் விளம்பரங்கள் பெற்றுத்தந்த திரு. லெ. லெக்ஷ்மணன் செட்டியார் அவர்களுக்கும் கும்பாபிஷேக சமயத்தில் **3** நாட்களும் சாப்பாடு ஏற்பாடுகள் செய்து நிதி கொடுத்தும், மேற்பார்வையிட்டும் மிகசிறப்பாக செய்த தேவகோட்டை ஒக்கூர் பங்காளிகளுக்கும், அதற்கான முயற்சிகள் செய்து உதவிய திரு. லெ. லெக்ஷ்மணன் செட்டியார், திரு.ராம. செல்லப்ப செட்டியார். திரு.செ. சொக்கலிங்கம் செட்டியார், திரு. அரு. தியாகராஜன் செட்டியார், திரு. கண.ராம. ஏகப்பசெட்டியார், திரு. கண. ராம. ராமனாதன் செட்டியார் ஆகியோர்களுக்கும், யாகசாலை நிகழ்ச்சிகளில் பல விதங்களில் உதவிபுரிந்த, ராம. செல்லப்பசெட்டியார் அவர்களுக்கும் மற்றும் ஒக்கூர் பங்காளிகளுக்கும், சோம. மெய்யப்பன் அவர்களுக்கும் மண்டலாபிஷேக சமயத்தில் சாப்பாட்டுப் பொறுப்பை தான் ஒருவரே ஏற்று மிக நல்ல முறையில் விருந்தளித்த மகிபாலன்பட்டி திரு. மு. முத்துக்கருப்பன் செட்டியார் அவர்களுக்கும், மற்றும் மகிபாலன்பட்டி ஒக்கூர் நகரத்தார்களுக்கும், யாகசாலையிலும் விடுதியிலும் மின்விளக்குகள் அமைத்தும் ஒலி பெருக்கி ஜெனரேட்டர்கள் முதலிய ஏற்பாடுகளை ஒரு சிறிய தொகையை பெற்றுக் கொண்டு மிகச்சிறப்பாக செய்து கொடுத்த திரு. இராம. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களுக்கும், பிள்ளையாருடைய திருவாச்சி விளக்குகள் எல்லாவற்றையும் பாலீஷ் போட வேண்டும் என்று கூறியவுடன் தன் பொறுப்பில் செய்து கொண்டுவந்து உதவிய திரு. பழ.அ. அண்ணாமலை செட்டியார் அவர்களுக்கும் நிறைய விளம்பரங்கள் வாங்கி உடனுக்குடன் அனுப்பித் தந்து உதவி புரிந்திட்ட திரு. அ.கரு.பழ.சோம.ராம. ராமசாமி செட்டியார் அவர்களுக்கும் திரு. அண. தமிழரசு செட்டியார் அவர்களுக்கும் நன்கொடை தந்தும், மலர் வெளியிடுவதில் நல்ல யோசனைகளை கூறியும் உதவி புரிந்த ராம.சுப. ராமனாதன் செட்டியார் அவர்களுக்கும், எல்லா நிகழ்ச்சிகளிலும் முதன்மையாக இருந்து ஊக்கம் அளிக்கும் திரு.கி.பழ.கி.பழநியப்ப செட்டியார் அவர்களுக்கும், நிதியும் அளித்து உதவியும் புரிந்திட்ட திரு. **MR.** அழகப்ப செட்டியார்

அவர்களுக்கும், எல்லா நிகழ்ச்சிகளிலும் எனக்கு உறுதுணையாக இருந்த திரு. கி.பிச்சப்ப செட்டியார் அவர்களுக்கும், ராம. அருணாசலம் செட்டியார் அவர்களுக்கும், து.க.சொ.முத்துராமன் செட்டியார் அவர்களுக்கும், VR. கிருஷ்ணன் செட்டியார் அவர்களுக்கும் கட்டிடத்திற்கு யோசனைகள் கூறியும் எஸ்டிமேட்களை சரி பார்த்தும், மலர் வெளியீட்டிற்கும் உதவிபுரிந்திட்ட திரு. SLN. பெரியணன் செட்டியார் அவர்களுக்கும் யாகசாலை நிகழ்ச்சிகளை நல்லமுறையில் நடத்தித் தந்து சிறப்பித்த சர்வசாதகம் பிள்ளையார்பட்டி சிவாகமரத்தினம். திரு. Dr. பிச்சைக்குருக்கள் அவர்களுக்கும் கைலாசவிநாயகரின் தினசரி பூஜைகளை சிறப்பாக செய்து வரும் 87 வயது பெரியவர் துரை குருக்கள் அவர்களுக்கும் ஸ்ரீ கைலாச விநாயகர் கோவில் நிகழ்ச்சிகள் எல்லாவற்றிற்கும் பொறுப்பேற்று நடத்தி தந்து கொண்டிருக்கும் திரு. பிரகாஷ் சிவாச்சாரியார் அவர்களுக்கும் உபயமாக வேலைகளை எடுத்துக்கொண்டு அதற்காக பெருமளவில் நிதி தந்து உதவிய பெருமக்கள் அனைவருக்கும், நிதி கொடுத்து உதவிய பெருமக்களுக்கும், ஒக்கூர் பொம்பிளைப் பிள்ளைகள் அனைவருக்கும், விளம்பரங்கள் தந்த அனைத்துப் பெருமக்களுக்கும், புள்ளிவரி தந்த ஒக்கூர் பங்காளிகள் எல்லோருக்கும், கட்டிட வேலைகளை நல்ல முறையில் பார்த்துத் தந்த PL.S. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் சோலையப்ப செட்டியார் அவர்களுக்கும், கோபுர வேலைகள் திருத்தமாகப் பார்த்த ஸ்தபதி S. நல்லதம்பி அவர்களுக்கும், யாகசாலைக் கொட்டகையை சிறப்புற அமைத்துத் தந்த வீரசேகர் அவர்களுக்கும், கும்பாபிஷேக பாலாலயம் முதல் மலர் வெளியீடு வரை எனக்குப் பல வழிகளிலும் உதவியாய் இருந்து சிறப்பாக நடைபெற உதவிய ஒக்கூர் மானேஜர் V. பழநியப்பன் அவர்களுக்கும், போட்டோக்களை மிக நல்ல முறையில் எடுத்துத் தந்த சுந்தரம் ஸ்டுடியோ மீ. சுப்பு அவர்களுக்கும் மலரில் போட்டிருக்கும் விநாயகர் படம் தந்த ராம. மணிகண்டன் அவர்களுக்கும், இம்மலரை விரைவாகவும், சிறப்பாகவும் அச்சிட்டுத் தந்த திருமகள் அச்சகம் பழ. சொக்கலிங்கம் அவர்களுக்கும், ஊழியர்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் எனக்கு உதவியாகவும் உறுதுணையாகவும் இருந்த அனைவருக்கும் எனது மனம் கனிந்த நன்றியைக் காணிக்கை ஆக்கி எல்லோரும் ஸ்ரீ கைலாச விநாயகரின் பேரருளால் அனைத்து செல்வங்களும் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு பெற வேண்டும் என்று அன்னை ஸ்ரீ கொப்புடையவளைப் பிரார்த்திக்கிறேன். இதில் யார் பெயரேனும் விடுபட்டிருந்தாலும், நன்றி சொல்ல மறந்திருந்தாலும் தவறுகள் நடந்திருந்தாலும் மன்னித்தருள வேண்டுகிறேன்.

இங்ஙனம்,

தங்கள் ஆசியையும் அன்பையும் வேண்டும்,

M.N.ST. நாகப்பன்.

(செயலர்)



கணபதி துதி

மங்கலத்து நாயகனே மண்ணாளும் முதலிறைவா
பொங்குதன வயிற்றானே பொற்புடைய ரத்தினனே
சங்கரனார் தருமதலாய் சங்கடத்தைசம்கரிக்கும்
எங்கள் குல விடிவிளக்கே எழில் மணியே கணபதியே
அப்பமுடன் பொரிகடலை அவலுடனே அருங்கதலி
ஒப்பில்லா மோதகமும் ஒருமனமாய் ஒப்புவித்து
எப்பொழுதும் வணங்கிடவே எமையாள வேண்டுமென
அப்பனவன் மடியமரும் அருட்கனியே கணபதியே
பிள்ளையாரின் குட்டுடனே பிழைநீக்கி உக்கியிட்டு
எள்ளளவும் சலியாத எம் மனதை உமக்காக்கித்
தெள்ளியனாய்த் திகழ்வதற்குத் தீந்தமிழில் போற்றுகின்றேன்
உள்ளியதை உள்ளபடி உகந்தளிப்பாய் கணபதியே
இன்றெடுத்த இப்பணியும் இனித்தொடரும் எப்பணியும்
நன்மணியே சண்முகனார் தன்னுடனே நீ எழுந்து
என்பணியை உன்பணியாய் எடுத்தாண்டு எமைக்காக்க
பொன் வயிற்றுக் கணபதியே போற்றியெனப் போற்றுகின்றேன்.

– துர்க்கைச் சித்தர்

உ
சிவமயம்

இளையாத்தக்குடி
ஒக்கூர் ஸ்ரீ கைலாச விநாயகர் கோவில்

மஹா கும்பாபிஷேக மலர் வெளியீட்டு விழா

தாரண வருடம் புரட்டாசி மாதம் 2ம் தேதி **18-9-2004** சனிக்கிழமை
பகல் 12.00 மணியளவில் மலர் வெளியிடுதல்

தலைமை	:	காரைக்குடி திரு. **M.S.R.M. மெய்யப்ப செட்டியார்** அவர்கள்
வரவேற்புரை	:	திரு. **M.N.S.T. நாகப்ப செட்டியார்** அவர்கள்
மலர் வெளியீடு	:	தேவகோட்டை திரு. **கண.லெ. கண்ணப்ப செட்டியார்** அவர்கள்
மலர் பெற்றுக்கொள்பவர்	:	திரு. **AL.S. அழகப்ப செட்டியார்** அவர்கள்
சிறப்புரை	:	கண்டவராயன்பட்டி கவிஞர் திரு. **கனகசபை செட்டியார்** அவர்கள்
நன்றியுரை	:	திரு. **AL.S. விஸ்வநாதன் செட்டியார்** அவர்கள்

இங்ஙனம்

கும்பாபிஷேக மலர்க்குழு
இளையாத்தக்குடி ஒக்கூர் நகரத்தார்கள்

உ
சிவமயம்
ஸ்ரீ கைலாச விநாயகர் துணை



நீர்சுமந்த சடைஎழிற்கை லாச நாதர் - நெஞ்சிலுறை நித்யகல்யாணி என்னும்
கார்சுமந்த குழலாளின் கருணைபெற்ற, கன்றாகி இளையாத்தக் குடியில் மேவி
ஏர்சுமந்த பிரிவேழில் முதலாய் வந்தே இன்புறும்ஒக் கூருடையார் இனிது போற்றத்
தார்சுமந்த கைலாய விநாய கன்தாள் தலைசுமந்து தலம்வளரத் தழைத்து வாழ்வாம்.

இளையாத்தக்குடி ஒக்கூர் அருள்மிகு கைலாச விநாயகர் திருக்கோவில்

திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா அழைப்பிதழ்

சிவநேசச் செல்வர்களே!

எல்லா வளமும் இனிதே நிறைந்த செந்தமிழ்ப்பாண்டி நன்னாட்டில் ஒன்பது நகரக் கோயில்களில் முதன்மையானது இளையாத்தக்குடி கோயில். அதன் ஏழுபிரிவு நகரத்தார்களில், முதல் பிரிவினரும் மேற்படி ஒன்பது நகரக் கோயில்களிலும் முதல் மரியாதைக்குரியவர்களுமாகிய இளையாத்தக்குடி ஒக்கூர் நகரத்தார்களால் சுமார் 80 ஆண்டுகட்கு முன்னர் **"பிரளையம்"** என்னும் குடிநீர் தடாகத்தைக் கருங்கற்களால் சித்திரவேலைப்பாடுகளுடன் அழகுற அமைத்தும் அருள்மிகு கைலாச விநாயகப் பெருமானுக்கு கவினுறும் ஆலயமும் அமைத்திருக்கிறார்கள். இப்போது அவ்வாலயத்தின் விமானத்தைப் பழுதுபார்த்து வண்ணம்தீட்டி, ஆலய முன் மண்டபத்தின் மூன்று (தெற்கு, கிழக்கு, வடக்கு) பக்கங்களிலும், சாளாகாரகம் புதுப்பித்தும் பல வண்ண வேலைப்பாடுகள் செய்தும், பிரளைய ஊரணியை செப்பனிட்டு புதுப்பித்தும், ஒக்கூர் விடுதி புதுப்பித்தும், **தாரண ஆண்டு ஆனித் திங்கள் 7ம் நாள் (21.6.2004) திங்கட்கிழமை** பூசநட்சத்திரம் திருதியை திதியும் சித்தயோகமும் கூடிய நன்னாளில் **காலை மணி 6க்கு மேல் 7.30 மணி** அளவில் மிதுன லெக்கினத்தில் அருள்மிகு **ஸ்ரீ கைலாச விநாயகப் பெருமான் ஆலய திருக்குட நன்னீராட்டு விழா** நடைபெறும். மெய்யன்பர்கள் எல்லோரும் வந்து கலந்து கொண்டு பேரானந்தப் பெருவாழ்வு பெற வேண்டுகிறோம்.

நிகழ்ச்சி நிரல்

தமிழ் வருடம் மாதம் தேதி	ஆங்கில தேதி கிழமை	நேரம்	நிகழ்ச்சி
தாரண ஆண்டு ஆனி மாதம் 4உ	18-6-04 வெள்ளி	மாலை 6.00 மணி	அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தனபூஜை
ஆனி மாதம் 5உ	19-6-04 சனி	காலை 8.30 மணி	கணபதி ஹோமம், அபிஷேகம்
		மாலை 4.00 மணி	வாஸ்து சாந்தி
		மாலை 5.00 மணி	மிருத்சங்கிரஹரணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம்
		மாலை 6.30 மணி	கடஸ்தாபனம், முதல்கால யாகபூஜை
		இரவு 8.45 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
ஆனி மாதம் 6உ	20-6-04 ஞாயிறு	காலை 8.30 மணி	இரண்டாம்கால யாகபூஜை
		காலை 11.00 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
		மாலை 6.00 மணி	மூன்றாம்கால யாகபூஜை
		இரவு 8.30 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
ஆனி மாதம் 7உ	21-6-04 திங்கள்	காலை 4.30 மணி	நான்காம்கால யாகபூஜை
		காலை 6.00 மணி	பூர்ணாகுதி தீபாராதனைகள்
		காலை 6.45 மணி	**விமான கும்பாபிஷேகம்**
		காலை 7.00 மணி	**மூலஸ்தான கும்பாபிஷேகம்**
		காலை 9.00 மணி	**மஹாபிஷேகம்**

இளையாத்தக்குடி
6-6-04

இப்படிக்கு,
இளையாத்தக்குடி ஒக்கூர் நகரத்தார்கள்

கற்பக விநாயகர் காரியசித்தி மாலை

இயற்றியவர் : கவிஞர் சிவல்புரி சிங்காரம்
(கண்ணதாச தாசன்), கீழக்சிவல்பட்டி – 630 205.

(விநாயகர் படத்தை வடக்கு பக்கம் பார்க்கும் விதம் வைத்து
அருகம்புல் மாலை அணிவித்தபின் படிக்கவும்.)

காப்பு

மூலக் கணபதியே ! முன்னிற்கும் கற்பகமே!
வேழ முகத்தோனே ! வேண்டும் வரம் நீ தரவே
ஞாலத்தில்உனைத் தொழுதே நற்பணிகள் தொடங்குகிறேன் !
காலம் முழுவதும் எனைக் காத்தருள்வாய் கற்பகமே !

ஊனாச் சிவமயத்தை உச்சரிக்கும் பக்தன் நான்!
பேனாப் பிடித்தவுடன் பிள்ளையார் சுழி போட்டுத்
தானாக எழுதியதால் தமிழ் வளர்ச்சி கண்டவன் நான்!
தேனாக வாழ்வமையத் திருவருள்தா கற்பகமே!

காரியசித்தி மாலை

ஜோதி வடிவானாய் ! சொர்ணத்தால் அழகானாய் !
பாதி மதியணிந்த பரமனிடம் பழம் பெற்றாய் !
ஆதி மூலம் நீ ஆனந்தம் தந்திடவே
ஓதி உனைத் தொழுதேன் ஓடிவா கற்பகமே !

கற்பக விநாயகனே ! காரியங்கள் சித்திக்க
ஒப்பற்ற பாமாலை உன்னெதிரில் பாடுகிறேன் !
சிவல்புரிச் சிங்காரம் சீர்மிகுந்த கவி கேட்டுக்
கவலையினைப் போக்கக் கனிந்து வா கற்பகமே !

அப்பமுடன் முப்பழமும் அதிரசமும் பொறிகடலை
சர்க்கரைகள் சேர்த்தே சாமி உன் முன் வைத்தேன் !
எப்பொழுதம் என்குரல் எதிர்கேட்டால் ஓடிவந்து
சொற்பவிதம் ஆக்கித் துணைக்குவா கற்பகமே !

பிள்ளையார் பட்டியிலே பெருங்கருணை வடிவாகி
உள்ளம் மகிழ உயர்ந்திருக்கும் உத்தமனே !
செல்வ விநாயகனே ! செவிசாய்க்கும் நாயகனே !
கல்வி வளம்பெருக்க கனிந்துவா கற்பகமே !

முப்பட்டைத் திருநீறு முழுமேனி சந்தனங்கள் !
அற்புதக் கீர்த்திகளை அண்டிவந்தால் தருபவனே !
கற்பனைக்கு எட்டாத கற்பகமே ! நினைத்ததெல்லாம்
இப்பொழுதே நிறைவேற்ற எழுந்துவா கற்பகமே !

அருகம் புல்லையள்ளி ஆனைமுகன் உனக்களிக்கப்
பெருகும் பொன்னையள்ளிப் பெருமையுடன் தருபவன் நீ !
உருகி மனமுருகி உனைத்தொழுது போற்றுகிறேன் !
அருகில் நீவந்து ஆதரிப்பாய் கற்பகமே !

சாதகத்தில் கேதுதிசை சரியாக நடப்பவர்கள்
ஆதரவாய் உனை வணங்கி அர்ச்சனைகள் செய்திடுவார் !
மோதகத்தில் பிரியம் வைத்த மூலக் கணபதியே !
பாதகத்தைப் போக்கி பலன் தருவாய் கற்பகமே !

தும்பிக்கை கொண்டவனே! தூதாகச் சென்றவனே !
நம்பிக்கை கொண்டு நானுன்னைத் தொழுகின்றேன்!
அம்புவியில் எனக்குவரும் அன்றாடப் பிரச்சனையை
இன்பமுடன் தீர்த்துவைக்க எழுந்துவா கற்பகமே !

சுண்டல்நை வேத்தியத்தால் தொல்லைகளைப் போக்கிடுவாய்
கிண்டல் செய்தோர்க்கும் கீர்த்தியினை நீ தருவாய் !
வண்டாடும் குழல்மாதர் மணம்காண வைப்பவனே !
இன்றேஎன் குரல்கேட்டு எழுந்துவா கற்பகமே !

வாரக் கிழமைகளாம் வளர்திங்கள் செவ்வாயில்
சீரான புதன், வியாழன் செம்பொன் வெள்ளி, சனி
பேராகும் ஞாயிறிலும் பெருமையுடன் துணையிருந்தே
தாராளமாய் அருளைத் தந்திடுவாய் கற்பகமே !

மண்ணாசை பொன்னாசை மகத்தான பெண்ணாசை
உன் ஆசை கொண்டோர் உதறித் தள்ளிடுவார் !
என் ஆசை நிறைவேற்றி இப்பிறவிப் பயனடைய
முன் வருவாய் ஆனை முகத்தானே கற்பகமே !

காட்டு வழி செல்கையிலே கள்ளர் பயம் போக்குதற்கு
மாற்று வழி உன் பெயரை மனதில் உச்சரிப்போம் !
போற்றி வழிபட்டேன் ! புகழ் செல்வத் தோடெனக்கு
ஆற்றல் மிகுந்துவர அருள்தருவாய் கற்பகமே !

எந்த எதிர்ப்புகளும் என்னை வந்து தாக்காமல்
சொந்தம் சுற்றமெல்லாம் துணைவந்து காப்பாற்ற
சந்திரனை தலைவைத்த சங்கரனின் புதல்வா நீ
சிந்தனைகள் வெற்றி பெறத் திருவருள்தா கற்பகமே !

பருவ வயதில் நான் பலபாவம் செய்தாலும்
உருவம் பெரியவன் நீ ! உள்ளத்தால் மன்னிப்பாய் !
அறியாது பிழைசெய்த அடியேனைக் காப்பாற்ற
உரியதொரு நேரத்தில் ஓடிவா கற்பகமே !

அரச மரத்தடியில் ஆறு குளம் அருகில்
சிரசில் கொட்டிச் செவிபிடித்தால் வரம் தரும் நீ
மலையில் எழுந்தருளி மக்களுக்கு அருள்தந்தாய் !
கலைகள் கற்பதற்கே கருணை தா கற்பகமே !

'இன்று போய் நாளை வா' எனச் சனியை எழுத வைத்துத்
தந்திரத்தைக் கையாண்ட தலைவனுனைப் போற்றுகிறேன்
ஏழரைச் சனியோடு எச்சனியும் விலகி என்றன்
வாழ்வில் நலம் காண வரம் தருவாய் கற்பகமே !

சிதறுகாய் உடைத்தால் சிதறிடும் துயரமென்றார் !
கதறிநான் அழுவதுன்றன் காதுக்குக் கேட்கலையா !
பதறாமல் நானிந்தப் பாரில் பணிபுரிய
இதமாக அருள்கொடுக்க எழுந்தருவாய் கற்பகமே !

நோய்க்கு மருந்தாவாய் ! நொடியில் குணப்படுத்தித்
தாய்க்குப் பிள்ளையெனத் தாவிவந்து அணைத்திடுவாய் !
சீக்குச் சிரங்கின்றித் தேசத்தில் நான்வாழ
ஊக்கம் எனக்களித்து உதவிசெய்வாய் கற்பகமே !

நாரதரின் சொற்கேட்டு ஞானப் பழத்தை நீ
சீரோடு தந்தை சிவனிடத்தில் பெற்றுவிட்டாய் !
பாரில் நான் தினமும் பசியின்றிப் புசித்திடவே
சீராகத் தானியங்கள் சேர்த்தருள்வாய் கற்பகமே !

வள்ளியினை மணக்க வடிவேலன் துணையாகி
புள்ளி மயில் வேந்தனுக்குப் புதுவாழ்வு நீ கொடுத்தாய் !
இல்லறத்தை ஏற்று இனிய சுகம் நான் காண
வல்லவனே ! உனைத்தொழுதேன் வரம் தருவாய் கற்பகமே !

ஔவைக்கு உதவியவா ! அரியதொரு பாரதத்தை
செவ்விய தந்தத்தால் திருக்கரத்தால் எழுதியவா !
நவ்வை மரத்தடியில் நலம்கண்ட தமிழ்த்தாய் போல்
தெய்வ விளையாட்டால் திருவருள்தா கற்பகமே !

போராட்டம் துயரனைத்தும் பொடிப்பொடியாய் ஆக்கிவைத்து
சீரோடு செல்வத்தைச் சேர்த்தளிக்கும் தெய்வம் நீ !
யாரோடும் நட்பாகி நல்லசெயல் நான்புரிய
பேரோடும் புகழோடும் பெருமை தா கற்பகமே !

கந்தனுக்கு முன்பிறந்த கற்பகமே நீ உலகில்
எந்தன் துயர்நீக்க இன்னும் தாமதமேன்?
வந்தனைகள் செய்தேன்! வரம்கேட்டு நிற்கின்றேன்!
எ(ழு)ந்திரிந்து வந்தே எழில் தருவாய் கற்பகமே !

சுபம்

இளையாற்றங்குடி ஒக்கூர் இணையிலா
கைலாச விநாயகரின் குடமுழுக்கில் பாடிய குதூகலக் கவிதை இது.

நகரத்தார்	ஒன்பது	நற்கோவில்	இருந்தாலும்
அகமகிழ	முதல்மரியாதை	அனைத்துக்	கோவில்தருகின்ற
தகதகப்பு	பரம்பரையார்	தரணிபுகழ்	ஒக்கூரார்
காஞ்சிமட	அஷ்டானம்	கவினுறவே	அமைந்துள்ள
நற்பிரிவு	ஏழுஉள்ள	நற்கோவில்	இளையாற்றங்குடியில்
சூரபத்மன்	துன்பத்திற்கு	தொல்லைஅடை	தேவர்கள்
ஆறஅமர	இளைப்பாறிய	அருமைஇளை	யாற்றங்குடியில்
தலத்தால்	மூர்த்திகளால்	தரமிகுந்த	தீர்த்தத்தால்
மூன்றுநற்	சிறப்புகளால்	முன்னேநிற்கும்	இளையாற்றங்குடியில்
சொற்பெருமை	கைலாச	சுகம்தரும்	விநாயகர்க்கு
அஷ்டபந்தன	குடமுழுக்கு	அற்புதமாய்	நடத்திவைத்து
இஷ்டம்போல்	எல்லாம்பெற்று	ஏகமாய்	வளர்ந்துவர
அறப்பணியும்	திருப்பணியும்	ஆர்வமாய்	செய்துவரும்
திறமிகு	நகரத்தார்கள்	திடமாக	வாழ்களன்று
கைலாச	விநாயகரை	கைதொழுது	வணங்குகிறேன்
புள்ளி	பெருகிவர	புகழுடனே	வாழ்ந்துவர
அள்ளிக்	கைகூப்பி	அகமகிழ	வேண்டுகிறேன்

அன்புள்ள,

T. குமரப்பன், தாலாட்டுக்கவிஞர், வேந்தன்பட்டி

கைலாச விநாயகர் துதி

ஒக்கூர்க் கைலாச விநாயகரே
[redacted] உம் பார்வை எப்போதும்
எம்மீது இருக்கவேண்டும்

தப்பேதும் செய்யாத வாழ்வு வேண்டும்
தரணியிலே சிகரங்களை அடைய வேண்டும்
ஒக்கூரார் உயர்குடியாய் ஓங்கி உயர வேண்டும்.

****

கைலாச விநாயகரின் காலடியில் சரணடைந்தால்
கைலாசம் போல் வாழ்க்கை கை மேல் அளித்திடுவார்
ஒக்கூர்ப் பிள்ளையாரை உளமுருகிப் பணிந்து நின்றால்
அக்கணமே உயர்வான வாழ்க்கையினை அடைந்திடலாம்.

****

கைலாச விநாயகரின் கடைக்கண் பார்வையாலே
கருமவினை அகன்று விடும் கவலையெல்லாம் பறந்துவிடும்
துக்கங்கள் தூளாகும், துயரங்கள் தோற்றோடும்
சிக்கல்கள் தீர்ந்து சிறப்பான வாழ்வு வரும்.

பாவாக்கம் – திருமதி. அடைக்கம்மை நாகப்பன்

நகரத்தார் பிள்ளையார் நோன்புப் பாடல்
பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை

எள்ளு பொரித்த பொரியும்
இடித்தவல் தன்னிற் கலந்து
வள்ளிக்கிழங்கைத் திருத்தி
வாழைப்பழத்தை யுரித்து
உள்ளிய பாகு திரட்டி
உண்ணும் படியே தருவோம்
கள்ளத் திருமால் மருகா
கணபதி சப்பாணி கொட்டாயே
ஆறுதேங்கா யவல் தூணி
அதற்குத் தகுந்த எள்ளுருண்டை
நூறுகுடலை மாம்பழம்
நொடிக்கு மளவி லமுதுசெய்ய
வல்ல பிள்ளாய்
ஆடல் பாடல் சங்கீதம்
அடியேன் காண நின்றாடாயே
சண்டப் பெருச்சாளி மீதேறிச்
சடுகுடு என்ன உலாவி
இண்டை இளம்பிறை சாய
இணங்கிய கொம்பேஇ ரண்டுத
அண்டத் தமரர் துதிக்க
அடைக்கலங் காத்த பிரானாரே
குண்டைக் கணபதி நம்பி
குடங்கையாற் சப்பாணி கொட்டாயே
பொழுது விடிந்தது பொழுது
போய்த் திருமலை ஏற வேண்டும்
ஏறிமலர்ந்த பூக் கொய்ய வேண்டும்
கொய்து திருமுடி சாத்த வேண்டும்
சாத்தியே கைகட்டி நிற்க வேண்டும்
நின்று திருவிளக்கேற்ற வேண்டும்
ஏற்றி அரகரா என்ன வேண்டும்
ஐயா கணபதி நம்பி
ஆயிரநாம முடையாய்
பொய்யில்லாத மெய்யுரைப்பாய்
போன தெல்லாந் தருவாய்
வெள்ளித்தாளம் பூசி வைத்து
வேண்டும் படியே இட்டுண்டு
பள்ளிக்கேற்ப நடவாய்
பாக்கியஞ் செய்த பிள்ளாய்
பிள்ளாய் பிள்ளாய் பேருடையாய்
பிரம னென்னும் பேருடையாய்
பிள்ளைகள் தங்கள் பிரானாரே
இருந்தீரே பிரானாரே
எங்கள் மனது கலங்காதே
பள்ளித் தடுக்கும் கையோடும்
படிக்கும் சுவடியும் பரிந்தெடுத்து
துள்ளித் திரியும் கால் தன்னை
சுகமே நிறுத்தும் பிரானாரே
ஓடாதே ஒளியாதே
இட்டதே சோறும் பெற்ற தேகறியும்
உண்டு தூங்கிப் பூஜை முடித்து
வெள்ளி முளைக்கப் பள்ளிக்கு வாரும்
பள்ளியிற் பிள்ளையார் சிந்தனை முற்றிற்று.

அபிஷேகப் பலன்

1. மாம்பழம்	– வெற்றி	9. எலுமிச்சம்பழம்	– எமபய நிவர்த்தி
2. பஞ்சாமிர்தம்	– செல்வம்	10. வாழைப்பழம்	– பயிர் விருத்தி
3. இளநீர்	– நல்ல பதவி	11. தயிர்	– புத்ர சந்தானம்
4. விபூதி	– நன்மை	12. தேன்	– நல்ல சாரீரம்
5. சந்தனம்	– மேலான பதவி	13. வெல்லம்	– துக்க நிவர்த்தி
6. பன்னீர்	– சந்தோஷம்	14. சர்க்கரை	– சத்துரு ஜெயம்
7. பால்	– ஆயுள் விருத்தி	15. சாதம்	– சகல நன்மை
8. நெய் எண்ணெய்	– விஷஜுர நிவர்த்தி	16. ஜலம்	– சாந்தி உண்டாக

பிள்ளையார் பெருமை!

சிதம்பரம் மௌனம் சுந்தரமூர்த்தி சுவாமிகள்

தேவலோகத்தில் தேவேந்திரன் நாளோலக்க மண்டபத்தில் தேவி இந்திராணியோடு கொலுவீற்றிருக்கின்றான்.

ஒருபுறம் முப்பத்து முக்கோடி தேவர்களும், மறுபுறம் நாற்பத்தெட்டாயிரம் முனிபுங்கவர்களும் அமர்ந்திருக்க, அன்றைய நிகழ்ச்சியின் முதலாவது அங்கமாக நந்தியம் பெருமான் சுத்தமத்தளம் முழங்க நிகழ்வுகள் தெடங்கின.

தேவ சபையில் நாளும் அலங்கரித்து ஆடும் ரம்பை, திலோத்தமை, ஊர்வசி, மேனகை நாட்டியம் தொடங்கியது. பரதம் என்பது பதம், ராகம், தாளம் மூன்றும் இணைந்து ஆடுவது. ஊர்வசியின் கவனம் முனிவர்களின் முன்வரிசையில் அமர்ந்திருந்த மோகன வடிவாகத் திகழ்ந்த ஒருவரின்பால் சென்றது. ஆகவே அவளது ஆட்டத்தில் பதம் தவறினாள். மேலே அமர்ந்திருந்த தேவேந்திரன் கண்டு (அருகமர்ந்திருந்த இந்திராணியிடம் சுட்டிக்காட்டினான். சபையின் அன்றைய நிகழ்வுகள் அனைத்தும் நடந்தேறின. தேவேந்திரன் ஊர்வசியின் உள்மனத்தை உணர்ந்தவனாகையால் சபிக்கின்றான். சாபத்தைக் கேட்ட ஊர்வசி ஒடோடி வந்து தேவ சாபத்துக்கு விமோசனம் யாது எனக் கேட்டுத் துடிக்கின்றாள். "விமோசனமே கிடையாது" போ என வெகுண்டுரைக்கின்றான்.

சாபத்தால் ஊர்வசி பூலோகத்தில் புலயர் குலத்தில் வந்து பிறக்கின்றாள். வறுமையில் வாடும் குடும்பம். வளர்கின்றாள் பேதை, பெதும்பை பருவம் கடந்து மங்கைப்பருவம் அடைகின்றாள். வயிறு வளர்க்க அதாவது பிழைப்புக்காக குலத்தொழிலாகிய புல் அறுத்துப் பசுவுக்குக் கொண்டுபோய் விற்று, பெற்றோருக்கும், உற்றோர்க்கும் உற்றதுணையாக அமைந்து வந்து வாழ்ந்து கொண்டிருந்தாள்.

வழக்கம் போலத் தன்தொழிலுக்குச் சென்றாள். புல்லைச் சேகரித்துக் கட்டி, தலையில் சுமந்தபடி, ஊரை நோக்கிப் புறப்பட்டாள். அந்திநேரம் ஊரின் எல்லையை அடைந்தாள், காற்றும் மழையும் கடுகி வந்தன. ஊரணி பிள்ளையார் கோயில் அருகில் வர, தூரல் தொடங்கின.

மழையில் நனைந்தால் மாற்றுடையில்லாதவள் பிள்ளையார் கோயில் படிக்கட்டில் புல்லுக்கட்டைப் போட்டு, தன் குலத்தால் அஞ்சிய நிலையில், கோயிலின் மறுபுறம் மழையிலும் சாரலிலும் நனையாமல் ஒதுங்கி நின்றாள். பலமான காற்று வீசியது. வேகமாக வீசிய காற்றினாலும், தலையிலிருந்து போட்ட அதிர்ச்சியினாலும் புல்லுக்கட்டு அவிழ்ந்தது. அடுத்த காற்று வீசியது. பசுவுக்குக் கொண்டு வந்த புல்லிலிருந்து இரண்டொரு அறுகம்புல் பறந்து சென்று விநாயகப்பெருமானின் திருவடிகளில் வீழ்ந்தன, இரண்டொரு புல் திருமேனியைச் சேர்ந்தன. சேர்ந்த அம்மட்டில் விமோசனமில்லாத சாபம் விமோசனம் ஆகி ஊர்வசி ஆனாள். என்னே! அச்சர்யம்!! அவள் "ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்தேனுந்து மலர்ப் பாதத்து அமுதுண்டு" தெளிவெய்தினாள்.

புலர்ச்சியாக இருந்து செய்த அவளது செயல் அபுகுத்தி பூர்வமானது. அதாவது என்ன செய்கிறோம் என்று அறியாது செய்த செயல். பல்துலக்காமல், நீராடாமல், திருநீரணியாமல்

(விபூதி அணியாமல்), தோய்த்துலர்ந்த ஆடை அணியாமல், உறங்கி விழித்த நிலையில் சென்று பசுவுக்குக் கொண்டு வந்த அறுகம்புல்லே காற்றில் பறந்து சென்று பிள்ளையாரின் திருமேனி சேர்ந்தமைக்கே விமோசனம் இல்லாத சாபம் விமோசனம் ஆயிற்று.

நாம் நாளும் நன்னீராடி, புத்தி பூர்வமாகச் "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞான"ச் சிந்தையராகச் சென்று நந்தவனத்து அறுகம்புல் கொண்டுவந்து விநாயகப் பெருமானை வழிபட்டால் என்னென்னவெல்லாம் கிடைக்கும் என்பதை நீங்களே உய்த்து உணர்ந்து கொள்ளுங்கள்.

(மௌனம்)

ஒன்பது கோவில்களும், பிரிவுகளும், விவரம்

இளையாற்றக்குடிக்கோவில்

சுவாமிபெயர் – கைலாசநாதர்

அம்மைபெயர் – நித்தியகல்யாணி

பிரிவுகள்

கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான, குலசேகரபுரத்தில்,

(1) ஒக்கூருடையார்

(2) அரும்பாற்கிளையாரான, பட்டணசாமியார்

(3) பெருமருதூருடையார்

(4) கழனிவாசக்குடியார்

(5) கிங்கிணிக்கூருடையார்

(6) பேரசெந்தூருடையார்

(7) சிறுசேத்தூருடையார்

மாற்றூர்க் கோவில்

சுவாமி பெயர் – ஐநூற்றீசர்

அம்மை பெயர் – பெரியநாயகி

பிரிவுகள்

கேரளசிங்கவள நாடாகிய பிரம்பூர் நாட்டில், மாற்றூரான வீரபாண்டியபுரத்தில்,

(1) உறையூருடையார்

(2) அரும்பாக்கூருடையார்

(3) மணலூருடையார்

(4) மண்ணூருடையார்

(5) கண்ணூருடையார்

(6) கருப்பூருடையார்

(7) குளத்தூருடையார்



வைரவன் கோவில்

சுவாமி பெயர் – வளரொளிநாதர்
அம்மை பெயர் – வடிவுடையம்மை

பிரிவுகள்

கேரளசிங்கவள நாடாகிய ஏழகப்பெருந்திருவான, வீரபாண்டியபுரத்தில்,

(1) சிறுகுளத்தூருடையார்

இதில்உள்பிரிவுகள்

(1) பெரியவகுப்பு

(2) தெய்யனார் வகுப்பு : (தெய்வநாயகர்வகுப்பு)

(3) பிள்ளையார் வகுப்பு

(2) கழனிவாசலுடையார்

(3) மருதேந்திரபுரமுடையார்

இரணியூர்க்கோவில்

சுவாமி பெயர் – ஆட்கொண்டநாதர்
அம்மை பெயர் – சிவபுரத்தேவி

(1) கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான, குலசேகரபுரத்தில், இரணியூர், மருதங்குடியான ராசநாராயணபுரத்தில், இரணியூர்த்திருவேட்பூருடையார்.

பிள்ளையார்பட்டிக்கோவில்

விநாயகர் பெயர் – கற்பகவிநாயகர்
சுவாமி பெயர் – திருவீசர்
அம்மை பெயர் – சிவகாமவல்லி
சுவாமி பெயர் – மருதீசர்
அம்மை பெயர் – வாடாமலர்மங்கை

(1) கல்வாசநாட்டில் இளையாற்றக்குடியான, குலசேகரபுரத்தில், இரணியூர், மருதங்குடியான ராசநாராயணபுரத்தில், பிள்ளையார்பட்டியான திருவேட்பூருடையார்.

நேமங்கோவில்

சுவாமி பெயர் – செயங்கொண்டசோளீசர்
அம்மை பெயர் – சவுந்தரநாயகி

(1) கேரளசிங்கவளநாட்டில் நேமமாகிய குலசேகரபுரத்தில், தேனாறுபாயும், இளநலமுடையார்.

இலுப்பைக்குடிக்கோவில்

சுவாமி பெயர் – தான்றோன்றியீசர்
அம்மை பெயர் – சவுந்தரநாயகி

(1) கேரளசிங்கவளநாடாகிய பிரம்பூர் நாட்டில், இலுப்பைக்குடியான, புகழிடங்கொடுத்தபட்டணத்தில், சூடாமணிபுரமுடையார்.

சூரைக்குடிக்கோவில்

சுவாமி பெயர் – தேசிகநாதர்
அம்மை பெயர் – ஆவுடைநாயகி

(1) கேரளசிங்கவளநாட்டில் சூரைக்குடியான, தேசிகநாராயணபுரத்தில், புகழ்வேண்டியபாக்கமுடையார்.

வேலங்குடிக்கோவில்

சுவாமி பெயர் – கண்டீசுவரர்
அம்மை பெயர் – காமாட்சியம்மை

(1) கேரளசிங்கவளநாடாகிய பாலையூர் நாட்டில், வேலங்குடியான தேசிக நாராயணபுரத்தில், கழனிநல்லூருடையார்.

இவர்கள் பெருமை இதனால்

அரிச்சந்திரன் பெருமை	–	வாய்மை (சத்தியம்)
கர்ணனின் பெருமை	–	கொடை
பீமனின் பெருமை	–	வலிமை
தர்மரின் பெருமை	–	பொறுமை
விஜயனின் பெருமை	–	வில்வித்தை
கண்ணகியின் பெருமை	–	கற்பு
கம்பனின் பெருமை	–	காவியம்
மகாகவி காளிதாசனின் பெருமை	–	கவித்துவம்
மகாத்மாகாந்தியின் பெருமை	–	அஹிம்சை

பயனற்றவை ஏழு

1. ஆபத்துக்கு உதவாத பிள்ளை
2. நல்ல பசிக்கு உதவாத அன்னம்
3. தாகத்தை தீர்க்காத தண்ணீர்
4. மிக அதிகமாக செலவு செய்யும் மனைவி
5. கோபம் தணிக்காத கணவன்
6. நீதி தவறும் அரசன்
7. பாவங்கள் தீர்க்காத தீர்த்தங்கள்.
   பயனில்லை ஏழுந்தானே.

வலம் வருதல்

விநாயகர்	–	1 அல்லது 3 முறை
கதிரவன்	–	2 முறை
சிவபெருமான்	–	3, 5, 7 முறை (ஒற்றைப்படை)
முருகன்	–	3 முறை
தட்சிணாமூர்த்தி	–	3 முறை
அம்பாள்	–	4, 6, 8 (இரட்டைப்படை)
விஷ்ணு	–	4 முறை
இலக்குமி	–	4 முறை
அனுமன்	–	11 அல்லது 16 முறை
நவக்கிரகம்	–	3 அல்லது 9 முறை
அரசமரம்	–	7 முறை

ஸ்ரீ ஓங்காரானந்த சுவாமிகளின் சொற்பொழிவிலிருந்து சில துளிகள் :

பகவத்கீதையில் "ஆசையை அடக்கவேண்டும்" என்பதற்கு ஒரு சிறு கதை:

யயாதி மகராஜாவிற்கு உலகில் உள்ள பலவற்றின்மீது மிகுந்த ஆசை. ஆசையை அனுபவிப்பதே அவருடைய வாழ்வின் நோக்கமாக இருந்தது. ஒரு கால கட்டத்தில் அவருக்கு எல்லோருக்கும்போல் முதுமை வந்துவிட்டது. ஆசைகளை அடைய முடியவில்லை. ஆனால், அவரால் தன்னுடைய ஆசைகளை முழுமையாக நிறைவேற்றிக் கொள்ளாமல் உலகைவிட்டுப்போக மனது வரவில்லை.

எனவே, ஒரு முனிவரைப் பார்த்து இதற்கு ஒரு வழி கேட்டார். அவரும், இவரிடம் "நீ உன்னுடைய 4 மகன்களில் ஒருவனுடைய இளமையை உனக்குத்தந்து, பதிலுக்கு அவனை உன்னுடைய முதுமையைப் பெற்றுக் கொள்ளச் சொல். அவ்வாறு செய்தால் உனக்கு இன்னும் பல ஆண்டுகள் வாழ வழி கிடைக்கும். அதற்குள் நீயும் உன்னுடைய ஆசைகளைப் பூர்த்தி செய்து கொண்டுவிடலாம்" என்றார்.

யயாதி மன்னனும் அவ்வாறே தன் மகன்களைக் கேட்க, மூவர் மறுத்துவிட ஒரு மகன் ஒப்புக்கொண்டு, தன்னுடைய இளமையைத் தந்தைக்குத் தந்தான். யயாதி மீண்டும் ஆசைகளை அனுபவிக்கத் துவங்கினான்.

சில ஆண்டுகள் கழித்து, யயாதி தான் முன்பு சந்தித்த அதே முனிவரை மீண்டும் சந்தித்து "ஐயா! எனக்கு இந்த இளமை வேண்டாம். என்னுடைய முதுமையே போதும். அதற்கு உதவுங்கள்" என்றார். முனிவர் காரணம் கேட்க, பதிலாக யயாதி சொன்னது:

"ஆசை என்பது முழுமையாக அடைந்து திருப்தி பெற முடியாதது. ஒன்றை அடைய அடைய, அதில் ஒரு இன்பம், சுகம் ஏற்பட்டு – மேற்கொண்டு, மேற்கொண்டு அது இன்னும் வேண்டும் என்ற எண்ணம்தான் வளரும். இது எப்படி இருக்கிறது என்றால் எரிகின்ற நெருப்பை அணைக்க அதில் நெய்யை விடுவதுபோல் உள்ளது. ஆசையைப் பூரணமாக அடைந்து

திருப்தி பெறுவோம் என்பதைவிட மனதால் ஆசையை அடக்கி, பெற்றது போதும் என்ற எண்ணம் வந்தால் நமக்கு நிம்மதியும், நல்வாழ்வும் கிடைக்கும்." ஆசையை முழுவதுமாக அடக்க இயலாவிட்டாலும், பேராசைப்படுவதையாவது தவிர்க்கலாம். பேராசை பெரு நஷ்டமாக ஆகிவிடுமல்லவா.

– *சொற்பொழிவைக் கேட்டு வழங்கியவர் :–* சி.சொ.ராம. நாச்சியப்பன் (மணி)

32 கணபதிகள்
நிறமும் - வழிபாட்டுப் பலனும்

திரட்டியது : சு.ச.முரு.ச. பழனியப்பன், காரைக்குடி.

1)	பாலகணபதி	:	சிவப்புநிற மேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	காரிய அனுகூலம் பெறலாம்.
2)	தருண கணபதி	:	நடுப்பகல் சூரியனின் நிறம் உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	கல்வி கேள்வியில் சிறப்படையலாம்
3)	பக்திக் கணபதி	:	வெண்மை நிறமுடையவர்
	வழிபாட்டுபலன்	:	மனநிம்மதி ஏற்படும்
4)	வீர கணபதி	:	சிவந்த திருமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	பகைவரின் பயம் நீங்கும்
5)	சந்திக் கணபதி	:	செந்தூர நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	திருமணப் பாக்கியம் ஏற்படும்
6)	துவஜ கணபதி	:	வெள்ளை நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	சரஸ்வதி கடாக்ஷம் கிடைக்கும்.
7)	சித்தி கணபதி	:	மஞ்சள் நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	லெட்சுமி கடாக்ஷம் கிடைக்கும்
8)	உச்சிஷ்ட கணபதி	:	நீலநிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	நோய்கள் தீரும்
9)	விக்ன கணபதி	:	தங்க நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	சகல வினைகளும் நீங்கும்
10)	க்ஷிப்ர கணபதி	:	சிவப்பு நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	உடல் நலம் உண்டாகும்
11)	ஹேரம்ப கணபதி	:	பசுமை கலந்த கருமை நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	காரியத்தில் வெற்றிகிட்டும்
12)	லக்ஷுமி கணபதி	:	வெண்மை நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	வறுமை பிணி நீங்கும்
13)	மஹா கணபதி	:	செந்நிற மேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	பருவமழை தவறாமல் பெய்யும்
14)	விஜய கணபதி	:	சிவப்பு நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	இல்லத்தில் விசேஷம் உண்டாகும்
15)	நர்த்தன கணபதி	:	சிகப்பு நிறமேனி உடையவர்
	வழிபாட்டுப்பலன்	:	சகல உயிர்களிடத்தும் அன்பு உண்டாகும்.

16) ஊர்த்துவ கணபதி : பொன்னிற மேனி உடையவர்
வழிபாட்டுப்பலன் : சகல பாக்கியமும் கிடைக்கும்

17) ஏகாட்சர கணபதி : செந்நிறமானவர்
வழிபாட்டுப்பலன் : சகல செளபாக்கியங்களும் அருள்வார்

18) வர கணபதி : செவ்வண்ணர்
வழிபாட்டுப்பலன் : வரங்களை நல்குவார்

19) திரயாக்ஷர கணபதி : பொன்னிறமானவர்
வழிபாட்டுப்பலன் : பொன், பொருள் அருள்வார்.

20) க்ஷிப்ரப்பிரசாத கணபதி : மஞ்சள் நிறத்தவர்
வழிபாட்டுப்பலன் : ஞானத்தை நல்குவார்.

21) ஹரித்திரா கணபதி : மஞ்சள் நிறமானவர்.
வழிபாட்டுப்பலன் : இம்மை நலன்களை அருளுவார்.

22) ஏகதந்த கணபதி : நீலமேனியர்
வழிபாட்டுப்பலன் : சாஸ்திர ஞானம் தருவார்.

23) சிருஷ்டி கணபதி : சிவந்த திருமேனியர்
வழிபாட்டுப்பலன் : குழந்தைப் பாக்கியம் கொடுப்பார்.

24) உத்தண்ட கணபதி : சிவந்த மேனியர்
வழிபாட்டுப்பலன் : இல்லற நலம் அருளுவார்.

25) ரணமோசன கணபதி : வெண்பளிங்கு போன்ற திருமேனியர்
வழிபாட்டுப்பலன் : போக போக்கியங்களைத் தருவார்.

26) துண்டி கணபதி : சிவந்த மேனியர்
வழிபாட்டுப்பலன் : பக்தி நலம் அருளுவார்.

27) துவிமுக கணபதி : பசுநீல மேனியர்
வழிபாட்டுப்பலன் : வளமையெல்லாம் வழங்குவார்.


28) மும்முக கணபதி : புரசம் பூவைப்போன்ற சிவந்த நிறம் உடையவர்.
வழிபாட்டுப்பலன் : ஞாபசக்தியை வளர்ப்பார்.

29) சிங்க கணபதி : வெண்ணிறமான திருமேனியர்
வழிபாட்டுப்பலன் : வீரத்தை நல்குவார்.

30) யோக கணபதி : இளஞ்சூரியன் போன்ற நிறத்தை உடையவர்.
வழிபாட்டுப்பலன் : முக்திப் பேற்றை அருளுவார்.

31) துர்க்கா கணபதி : சுட்ட பசும் பொன்நிறம் உடையவர்.
வழிபாட்டுப்பலன் : சக்தியைத் தருவார்.

32) சங்கடஹர கணபதி : இளஞ்சூரியனைப் போன்ற நிறமுடையவர்.
வழிபாட்டுப்பலன் : விரதப் பலனை அருளுவார்.



பிரசித்தி பெற்ற பிள்ளையார் தலங்கள்

தொகுப்பு
சு.ச.முரு.ச. பழனியப்பன், காரைக்குடி.

உச்சிப்பிள்ளையார் : திருச்சி மலைக்கோட்டை உச்சியில் காட்சி தந்த ராமன் தந்த ரங்கநாதரைக் காவிரிக் கரையில் இருத்தி அதற்காக வீபீஷணனிடம் குட்டுப்பட்டவர்.

ஸ்வேத விநாயகர் : சுவாமி மலைக்கு அருகிலுள்ள திருவலஞ்சுழியில் தரிசிக்கலாம். பாற்கடலைக் கடையும் போது அமிர்தம் திரளும்படி இந்திரன் வழிபட்ட வெள்ளைப்பிள்ளையார். இந்திரன் பிரதிஷ்டை செய்த மூர்த்தி.

டுண்டி விநாயகர் : காசி

வாதாபி நாயகர் : திருவாரூர் அருகிலுள்ள திருச்செங்காட்டங்குடியில் வாதாபிக் கோட்டையிலிருந்து பரஞ்ஜோதியார் கொணர்ந்து பிரதிஷ்டை செய்த மூர்த்தி.

கற்பக விநாயகர் : சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரிலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள பிள்ளையார்பட்டியில் நரசிம்மவர்மனால் உருவாக்கப்பட்ட குகைக் கோவிலில் குகைச் சுவற்றில் செதுக்கப்பட்ட மூர்த்தி.

மாற்றுரைத்த பிள்ளையார் : திருவாரூர் கமலாலயக்கரை (விருத்தாலத்திலும் காட்சி) சுந்தரர் மணிமுத்தாறில் இட்ட பொன்னின் மாற்றை உறைத்துச் சரிபார்த்த மூர்த்தி.

கள்ளவாரணப் பிள்ளையார் : மாயவரத்தில் (மயிலாடுதுறை) சுமார் 20 கி.மீ. தொலைவிலுள்ள திருக்கடையூரில் உள்ள கணபதி. தேவர்களிடமிருந்து அமிர்தகலசத்தை ஒளித்து அவர்கள் வணங்கிய பின்னர் வழங்கிய நிலை.

படிக்காசு விநாயகர் : கும்பகோணத்திலிருந்து 24 கி.மீ. தொலைவிலுள்ள திருவீழிமிழலையில் காட்சி. அப்பருக்கும் சம்பந்தருக்கும் வாசி (பஞ்சம்) தீரப் படிக்காசுகளை அளித்த விநாயகர்.

பொல்லாப் பிள்ளையார் : சிதம்பரத்திலிருந்து 16 கி.மீ. தொலைவிலுள்ள ஸ்தலத்தில் நம்பியாண்டார் நம்பி மூலமாகத் திருமுறைகளை வெளிப்படுத்தி அருளிய விநாயகர். உளியில் செதுக்கப்படாத (பொள்ளா) ஸ்வயம்பு மூர்த்தி.

பிரளயங் காத்த விநாயகர் : கும்பகோணத்திலிருந்து 8 கி.மீ. தொலைவிலுள்ள திருப்புறம்பிய சேத்திரத்திலுள்ள விநாயகர். பிரளய காலத்தில் நீர் புகாத ஸ்தலம். விநாயக சதுர்த்தியின் போது தேன் மட்டும் அபிஷேகம்.

ஆபத்சகாய விநாயகர் : திருத்தணியில் திருமுருகன் மணம் புரிய அருள்புரிந்த விநாயகர்.

ஏகாதச ஸ்வயம்பு கணபதி : வடஆற்காடு மாவட்டம் வேலூரிலிருந்து 3 கி.மீ. தொலைவிலுள்ள செண்பாக்கம் சேத்திரத்தில் ஸ்வயம்பு வடிவத்தில் பதினொன்று கணபதிகள் அருள்பாலிக்கின்றனர்.

ஸ்வாநந்தே கணபதி : பூனாவிலிருந்து 50 கி.மீ. தொலைவிலுள்ள மயூரேசம் என்னும் கிராமத்தில் உள்ள விநாயகர். இக்கிராமத்தைச் சுற்றிலும் கணபதியின் ஆவரண தேவதைகளுக்கும் ஆலயங்கள் உள்ளன.

கல்யாண கணபதி : பம்பாயிலிருந்து 80 கி.மீ. தொலைவிலுள்ள டிட்வாலா என்னும் சேத்திரத்திலிருந்து இக்கணபதியை தரிசனம் செய்து பிரார்த்தனை செய்து கொள்பவர்களுக்கு விரைவில் திருமணம் கூடிவருகிறது.

வல்லப கணபதி : குன்றக்குடி, மதுரை; சுவாமி மலை; விருத்தாசலம் இன்னும் பல சேத்திரத்திரங்களிலும் வல்லபையை மடியில் அமர்த்திக் கொண்டு அருளும் கணபதியைத் தரிசிக்கலாம்.

முக்குறுணிப் பிள்ளையார்: மதுரை; மாயவரம்; சிதம்பரம் சேத்திரங்களில் அருள்புரியும் கணபதி.

வலம் வந்த விநாயகர் : சென்னை பெங்களூர் வழியில் 120 கி.மீ. தொலைவிலுள்ள திருவலம் சேத்திரத்தில் மாங்கணியைப் பெற தாய் தந்தையரை வலம் வந்த கோலத்தில் கணபதி அருள்பாலிக்கிறார்.

சிந்தாமணி விநாயகர் : திருப்பூரிலிருந்து 5 கி.மீ. தொலைவிலுள்ள திருமுருகன் பூண்டி. இறைவன் இருப்பதைச் சுந்தரருக்குக் கூவிக்காட்டி அருளிய விநாயகர் இங்கு இருக்கிறார்.

செவி சாய்த்த விநாயகர் : திருச்சியில் 20 கி.மீ. தொலைவிலுள்ள அன்பில் சேத்திரத்தில் வீற்றிருந்து சம்பந்தர் அக்கரையிலிருந்து பாடியதை செவிசாய்த்துக் கேட்ட வண்ணம் இருக்கும் திருக்கோலம்.

கைகாட்டி விநாயகர் : திருவாரூரிலிருந்து 10 கி.மீ. தொலைவிலுள்ள திருநாட்டியத்தான் குடியில் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு சிவபெருமானைச் சுட்டிக்காட்டிய திருக்கோலம்.

சுடுக்காய் பிள்ளையார் : திருவாரூரிலிருந்து 26 கி.மீ. தொலைவிலுள்ள திருக்காறை வாசலில் உள்ள கணபதி.

நாகாபரணப் பிள்ளையார் : நாகபட்டினம்

பஞ்சமுக விநாயகர் : நாகப்பட்டினம்; திருவானைக் கோவில்; சேலம்; கந்தாஸ்ரமம்; தத்தகிரி முதலிய தலங்களில் காட்சி தருகிறார்.

ஸ்ரீராஜ கணபதி : சேலம் நகரில் மிக அழகும் ராஜகம்பீரமும் வாய்ந்த வண்ணம் வேண்டுவோர் வேண்டுவதைத் தருபவர். சிங்காரமான கோயில்.

சொல்கேட்ட விநாயகர் : சிவகெங்கை மாவட்டம் காரைக்குடி அருகே கோ. வேலங்குடியில் உள்ள விநாயகர். பக்தர்களின் சொல்கேட்டு அருள்புரிபவர்.

****

சிவபெருமான் தாண்டவங்கள்

தில்லை	–	ஆனந்த தாண்டவம்
குற்றாலம்	–	திரிபுர தாண்டவம்
மதுரை	–	சந்தியா தாண்டவம்
திருநெல்வேலி	–	முனி தாண்டவம்
திருவாலங்காடு	–	காளி தாண்டவம்
திருக்கருவேலி	–	கொடு கொட்டி ஆட்டம்

நான்கு கோடி செல்வங்கள்!

செல்வம் எது?

இக் கேள்விக்குச் சரியான விடை கண்டுவிட்டால் வாழ்க்கைத் தத்துவமே புரிந்துவிடும்.

திருவள்ளுவரைக் கேட்டால் அவர் சொல்லுகிறார்;

செல்வத்துள் செல்வஞ் செவிச்செல்வம் அச்செல்வம்
செல்வத்துள் எல்லாந் தலை. (411)

"செவியால் கேட்டறியும் செல்வம், செல்வங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் செல்வமாகும். அச் செல்வம் செல்வங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும்".

செவிக்கு உணவு வேண்டும். அதிலும் நல்ல உணவு வேண்டும். கற்காவிட்டாலும் கேட்க வேண்டும். நல்ல விஷயங்களைக் கேட்காமல் வாய்க்கு மட்டும் உணவு கொடுத்துக் கொண்டே இருப்பவர்கள் – அதாவது சாப்பிட்டுக் கொண்டே இருப்பவர்கள், இருந்தால் என்ன இறந்தால்தான் என்?

என்றெல்லாம் வள்ளுவர் கேள்விச் செல்வத்தின் சிறப்பை வலியுறுத்துவார்.

திருமூலரை அணுகினால்

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே!" – என்பார்.

திருமூலர் மட்டுமல்ல; வாழையடி வாழையென வந்த திருக்கூட்ட மரபினர் யாவருமே இந்த அருந் திருப்பணியைத்தான் ஆற்றிப் போந்தனர்.

திருஞான சம்பந்தப் பெருமான்; திருநாவுக்கரசு சுவாமிகள்; சுந்தரமூர்த்தி நாயானார்; மாணிக்கவாசகப் பெருமான்;

இன்னும் பட்டினத்தார்; அருணகிரிநாதர்; அவருக்குப் பின்வந்த தயுமானவர்; வடலூர் வள்ளலார்; பாரதியார் போன்ற பெருந்தகைப் பெருங் கவிஞர்களும் தமிழால் ஆண்டவனைப் போற்றித் துதித்தனர். இச் செயல் அவர்களுக்காக மட்டுமல்ல; நமக்காகவும்தான்!

தேவாரம், திருவாசகம், திருமுறைகள் யாவும் இன்று நமக்கு ஒப்பற்ற செல்வங்களாக அமைந்து, நமது பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் உணர்த்தவில்லையா? தமிழுக்கு மட்டுமல்ல இவை செல்வங்கள். மனித குல மாண்புக்கு வழிகாட்டும் ஒளி விளக்குகள் நமது பக்திப் பனுவல்கள் ஆகும்.

இவையும் செல்வங்கள்தான்; அழியாத செல்வங்கள்; அன்பையும், பண்பையும், உணர்த்திப் பக்தியின் சக்தியைப் பரவச் செய்யும் செல்வங்கள் நமது திருமுறைச் செல்வங்கள் ஆகும்.

உலகியலில் ஒப்பற்ற செல்வம் எது? அதற்கும் திருவள்ளுவரே பதில் சொல்லுகிறார்.

பொருள் வேண்டும். உலகில் இன்பமாக வாழப் பொருள் வேண்டும். பொருள் இல்லையென்றால் உலகில் எச் செயல்தான் ஈடேறும். பொருள் இல்லார்க்கு இவ்வுலக இன்பங்கள் இல்லை என்பது உண்மைதான். ஆனால் பொருள் மட்டும் பெற்றுவிட்டால் வாழ்க்கை நிறைவெய்தி விடுமா?

பொருளற்றார் பூப்பர் ஒருகால்; பொருள் இல்லாதவர் ஒரு காலத்தில் வளம் பெற்று விளங்குவர். ஆனால், அருள் இல்லாதவர் வாழ்க்கையின் பயன் அற்றவரே; அவர் ஒரு காலத்திலும் சிறந்து விளங்குதல் இல்லை.

"அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணும் உள" (241)

பொருள்களாகிய செல்வங்கள் இழிந்தவரிடத்திலும் உள்ளன. (உயர்ந்தவரிடத்தில் மட்டும் உள்ள) அருளாகிய செல்வமே செல்வங்களில் சிறந்த செல்வமாகும்.

அருள் என்றால் என்ன?

"மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை" (244)

"தன் உயிரின் பொருட்டு அஞ்சி வாழ்கின்ற தீவினை, உலகில் நிலைபெற்றுள்ள மற்ற உயிர்களைப் போற்றி அருளுடையவனாக இருப்பவனுக்கு இல்லை." தன் உயிரின் பொருட்டு ஏன் அஞ்ச வேண்டும்? இந்த உயிர் எந்த நேரமும் இந்த உடம்பை விட்டுப் பிரியலாம். அதனால் அஞ்ச வேண்டியிருக்கிறது.

இறப்புக்கு அஞ்சாத மனிதன் உண்டா? ஆனால் கவிஞன் எதற்கும் அஞ்சமாட்டான்.

"காலா, என்றன் காலருகே வாடா.
சற்றே உன்னை மிதிக்கின்றேன்" – என்று பாடினான் பாரதி.

நாளென் செயும், வினைதான் என் செயும் எனை நாடிவந்த
கோளென் செயும் கொடுங் கூற்றென் செயும்?

– என்பார் அருணகிரிநாதப் பெருமான்.

அருளாளர்களுக்கு எம பயமில்லை. ஏன்; கற்புக்கரசி சாவித்திரியே எமனை வெல்ல வில்லையா?

பதினாறே வயது பெற்ற பாலகன், மார்க்கண்டேயன் சிவபெருமானைச் சரணடைந்து எமனை வென்று சிரஞ்சீவிப் பட்டம் பெறவில்லையா?

அதுதான் அருள்! ஆண்டவனின் அருள்; அந்த அருள் இல்லை யென்றால் மானிடப் பிறவியின் பயனே இல்லை என்பது திண்ணம்.

இன்னும் எளிமையாகச் சொன்னால்; தூய்மையான பக்தி செய்வதன் மூலம் ஆண்டவனின் கருணை கிடைக்கும். அந்தக் கருணையே நம் வாழ்க்கை கடைத்தேறப் பேரின்பப் பெருவாழ்வை நல்கும். இதற்குத் தமிழ்க் கவிஞர்கள், பெரியவர்கள் பலரும் சாட்சியாவர்.

ஞானசம்பந்தப் பெருமான் திருமண விழாவிலேயே சிவபெருமானைச் சேர்ந்து முக்திப் பேற்றை அடைந்தார். அப்பரும் ஜோதியில் கலந்தார். சுந்தரரை வெள்ளானை வந்து கைலாயத்திற்கு ஏற்றிச் சென்றது.

மாணிக்கவாசகர் தில்லையில் நடராஜர் சந்நிதியில் ஜோதியில் கலந்தார். அருணகிரிநாதர் அருந்தமிழ் பாடி இறுதியில் கிளி உருவாகி முருகப் பெருமானின் கரத்தில் அமர்ந்தார். நமது பட்டிணத்தார் திருவொற்றியூரில் பேய்க் கரும்பு இனிக்கச் சிவலிங்க வடிவமாக அமர்ந்து முக்திப் பேற்றை எய்தினார். இராமலிங்க சுவாமிகள் வடலூரில் ஜோதியில் கலந்தார்.

சொல்லிக்கொண்டே போகலாம்; இன்னும் பல பெரியவர்கள் ஆண்டவன் அருள்பெற்றுப் பேரின்பப் பெரு வாழ்வு பெற்ற பெருமைகளை! அருள் ஒரு பெரிய செல்வம்தான்! ஐயமே இல்லை.

செவியும் செல்வம்தான்;
அருளும் செல்வம்தான்!

ஔவையார் என்ன சொல்லுகிறார் தெரியுமா?

உலகியல் நடைமுறைக்கு வருவோம்.

"கூழுக்குப் பாடியவர் ஔவையார்.
பொன்னுக்குப் பாடியவன் கம்பன்" – என்பது பழமொழியாகும்.

கூழுக்குப் பாடிய அந்தக் கிழவி உலகியல் நடைமுறையில் கடைப்பிடிக்க வேண்டிய நான்கு ஒப்பற்ற செல்வங்களை மிக எளிமையாகச் சொல்லுகிறார்.

தஞ்சைத் தரணியை ஆண்ட சோழ மன்னனின் திருச் சபையை அநேக புலவர்கள் அலங்கரித்தனர். சோழ மன்னன் அந்தப் புலவர்களின் கவித்துவத்தைச் சோதிக்க எண்ணினான். உடனே புலவர்களை நோக்கி, "இன்று இரவுக்குள் நீங்கள் எல்லோரும் நான்கு கோடி பாடல்கள் பாடிக்கொண்டு வர வேண்டும்" என்று உத்தரவிட்டான். "நான்கு கோடி பாடல்களா? அதுவும் இன்று இரவுக்குள்ளா" என்ற புலவர்கள் திகைத்துப் போனார்கள். புலவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. பேந்தப் பேந்த விழித்தபடி வீதியில் முச்சந்தியில் நின்று பேசிக் கொண்டிருந்தார்கள்.

"ஐயா! நீர் பெரும் புலவர் என்று சொல்வீரே, நான்கு கோடி பாடல் பாடும்" என்றார் ஒருவர் மற்றொருவரை நோக்கி. "நான்கு கோடி நம்மால் முடியாதய்யா; நீர்தான் எதற்கும் முந்திரிக்கொட்டை போல் திரிவீர். மன்னரிடம் பரிசு வாங்க மட்டும் முதலில் போவீரே, இப்பொழுது நான்கு கோடி பாடுமே!" என்றார் அவர், பதிலுக்கு. இவ்வாறாக ஒருவருக்கொருவர் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர்.

"என்ன செய்வது? விடிந்தால் மன்னர் நான்கு கோடி பாடல்களைக் கேட்பார். இல்லையென்றால் அரச தண்டனைக்கு ஆளாக நேரும். முடிந்தால் பாடுங்கள்; இல்லயென்றால் ஊரை விட்டே ஓடி விடலாம்!" என்றார் ஒரு புலவர்.

"இதுதான் நல்ல யோசனை!" என்றார் இன்னொரு புலவர். அப்பொழுதுதான் அங்கே ஒரு கிழவி வந்தாள். முதுமை நிறைந்த பருவம்; ஆனால் முகத்திலே அருள் பொங்கும் உருவம். தள்ளாமை – அன்பையும் அருளையும் தள்ளாமை. தோளிலே ஒரு துணி மூட்டை தொங்கிக் கொண்டிருந்தது. ஒரு கை தடிமேல் வர படிப்படியாக அடியெடுத்து வைத்த வண்ணம் வந்தாள் அந்தக் கிழவி.

புலவர்களின் கிலேசத்தை நோக்கினார். "ஐயா! நீங்கள் எல்லாம் யார்? எதற்காக இப்படி வீதியில் இந்த இரவில் கவலையுடன் நின்று கொண்டிருக்கிறீர்கள்?" என்று வினவினாள் அவள்.

"மூதாட்டியே! நாங்களெல்லாம் புலவர்கள், சோழ மன்னர் சபையில் இருப்பவர்கள்!" என்றார் ஒரு புலவர்.

"அரசவைப் புலவர்களா? அப்படியானால் ஏன் அங்கலாய்த்தபடி நிற்கிறீர்கள்! உங்களுக்குத்தான் அரசவையில் ராஜோபச்சாரம் நடக்குமே!" என்றாள் அந்தப் பாட்டி.

"நேற்றுவரை ராஜோபச்சாரம்தான் நடந்தது. ஆனால் நாளைக்குத் தலை தப்புவது தம்பிரான் புண்ணியம் என்றாகிவிட்டது!" என்றார் இன்னொரு புலவர். "என்ன? அரசவைப் புலவர்களுக்கு அப்படி என்ன நிகழந்து விட்டது? ஏதாவது தப்புத் தண்டா செய்து விட்டீர்களா?

"தமிழைப் படித்ததுதான் தப்பு!"

"தமிழைப் படித்தது தப்பா? அப்படியெல்லாம் சொல்லாதீர்கள்! தமிழ் தெய்வீக மொழி! உயிரை உய்விக்கும் உயர்ந்தது தமிழ் மொழி! அதைக் கற்றுக் கவிபாடும் நீங்கள் பாக்கியசாலிகள்!"

"என்ன பாக்கியமோ பாட்டி? விடிவதற்குள் நான்கு கோடிப் பாடல்களை இயற்றி வரவேண்டுமென்று அரச கட்டளை. விடிந்தால் எங்கள் வாழ்க்கையே முடிந்துவிடும்! எந்தத் திசையில் ஓடுவது என்றுதான் யோசித்துக் கொண்டிருக்கிறோம்!"

"ஏன் ஓட வேண்டும்? நான்கு கோடி பாடவேண்டியதுதானே!"

"அம்மாடி! நான்கு கோடி பாடலா? மிஞ்சி மிஞ்சிப் போனால் நூறு பாட்டுக்கே மூச்சு வாங்கும்!" என்று பெருமூச்சு விட்டார் ஒரு பெரும் புலவர்.

அதாவது உருவத்தில் பெரிய புலவர்.

"புலவர்களே! அஞ்ச வேண்டாம்! உங்களை நான் காப்பாற்றுகிறேன்!" என்றாள் பாட்டி.

"கிழவி! விளையாடுகிறாயா? எங்களை நீ காப்பாத்துறியா?" என்றார் ஒரு புலவர். எல்லோரும் அவளை ஏளனமாகப் பார்த்தனர்.

"நாளைக் காலை அரசவைக்கு வாருங்கள்! அங்கே நான்கு கோடி பாடலைப் பாடி, அரசரிடமிருந்து உங்களைக் காப்பாற்றுகிறேன்!" என்றாள் கிழவி.

"என்ன? நாளைக்கு அரசவைக்கு வந்து நான்கு கோடி பாடலைப் பாடி எங்களைக் காப்பாற்றுகிறாயா? இது என்ன வேடிக்கையாக இருக்கிறது" என்றார் ஒரு புலவர். "உன்னால் முடியுமா கிழவி?" என்றார் இன்னொரு புலவர்.

"எங்கே, மாதிரிக்கு இப்பொழுதே ஒரு பாட்டை எடுத்து விடு!" என்றார் ஒரு அவசரக் குடுக்கை. "அதெல்லாம் இப்பொழுது இங்கே ஒன்றும் பாட முடியாது! நாளை அரசவையில் நான்கு கோடி பாடலையும் பாடுகிறேன்!" என்றாள் பாட்டி.

"பாட்டி! பாடலை அந்தத் துணி மூட்டைக்குள் வைத்திருக்கிறாயா?"

"இதோ, இங்கே!" என்று நெஞ்சைத் தொட்டுக் காட்டினாள் கிழவி. "கிழவி ரொம்பப் பெரிய ஆளா இருப்பா போலே இருக்கு! பாட்டி! உன்னை நம்பலாமா?"

"புலவர்களே! என்னை நூற்றுக்கு நூறு நம்பலாம்! நீங்கள் எல்லோரும் இப்பொழுது வீட்டுக்குச் சென்று நிம்மதியாகத் தூங்குங்கள்!" என்று சிரித்தபடி சொன்னாள் கிழவி.

"தூக்கமா? நாளைக்குத் தூக்கம் வருமா? துக்கம் வருமான்னு பார்ப்போம்!" என்று கூறிக்கொண்டே அனைத்துப் புலவர்களும் அங்கிருந்து அகன்றனர்.

மறுநாள் சோழ மன்னரின் அரசவை கூடிற்று. அரசன் புலவர்களை நோக்கிப் பேசினான். "புலவர்களே! நான்கு கோடி பாடல்களைப் பாடினீர்களா? எங்கே சொல்லுங்கள்!" என்று இயம்பினான்.

தலைமைப் புலவர் எழுந்து, "அரசே! நான்கு கோடி பாடல்கள் வருகின்றன!" என்று தட்டுத் தடுமாறியபடி சொன்னார். "என்ன? நான்கு கோடி பாட்டுக்கள் வருகின்றனவா? வண்டியிலா? ரதத்திலா?" என்று கேட்டு விட்டுக் கேலியாகச் சிரித்தான் மன்னன்.

“இல்லை அரசே! எங்கள் சார்பாக ஒரு புலவர் அவரும் புலவர்தான்! நான்கு கோடி பாடல்களைப் பாடுவார்! “எங்கே அவர் – அந்தப் புலவர் எங்கே ? நான்கு கோடி பாடலைப் பாடும் அந்த நல்ல புலவர் எங்கே ?” என்று ஆர்வமுடன் வினவினான் அரசன்.

சபையோரின் கண்கள் மூன்று திசைகளிலும் மொய்த்தன. அரசவைக்கு வரும் வழியில் வந்தாள் கிழவி. மெதுவான நடை – ஆனால் உறுதியாக அடியெடுத்து வைத்து வந்தாள் அந்தப் பாட்டி!

அரசன் உட்பட அனைவரும் அவளையே உற்று நோக்கி வியந்த வண்ணம் இருந்தனர். அரசவையின் மத்தியப் பகுதிக்கு வந்த அந்த அம்மையார் பேச ஆரம்பித்தாள்.

“அரசருக்கு வணக்கம்! நானும் புலவரே! நான்கு கோடிப் பாடலைப் பாடுகிறேன்!” என்றாள்.

“பாடலாம்!” என்றான் அரசன். பாடினாள் கிழவி.

“மதியார் தலைவாசல் மதித்தொருகால் சென்று
மிதியாமை கோடி பெறும்”

சபையோர் வியந்தனர். அனைவரின் முகங்களும் மலர்ந்தன. அரசன் பாராட்டினான்.

“ஆம், நிச்சயமாக இச் செயல் கோடி பெறும்!” என்று பாராட்டினான். ஒரு கோடி பாடல் கிடைத்து விட்டதே!

இரண்டாவது கோடி, இதோ;

“உண்ணீர் உண்ணீர் என்று உபசரியார் தம்மனையில்
உண்ணாமை கோடி பெறும்”

“உண்மையாக இதுவும் கோடி பெறும்!” என்றான் அரசன்

மூன்றாவது கோடி,

“கோடி கொடுத்தும் குடிப் பிறந்தார் தம்மோடு
கூடுதல் கோடி பெறும்”

அரசவையே ஆராவரித்தது,

“கோடானுகோடி கொடுப்பினும் தன்னுடைய நாக்கோடாமை
கோடி பெறும்”

நான்கு கோடிப் பாடல்களும் கிடைத்துவிட்டன. அரசன் அரியணையை விட்டு எழுந்தான். “அம்மையே! நான்கே வரிகளில் நான்கு கோடிப் பாடல்களுக்கு உரிய கருத்துக்களை அமைத்துப் பாடிய தாங்கள் யார் ? எண்ணிக்கையை விடக் கருத்துக்களே முக்கியம் என்பதை உணர்த்திவிட்டீர்கள்!” என்று அவர் அருகில் வந்தான் மன்னன். அங்கிருந்த முதியவர் ஒருவர் “இவர்தான் ஔவையார்!” என்று கூறினார்.

“ஔவையாரா ? பெருமாட்டியே! தாங்கள் அரசவைக்கு வந்ததே நாங்கள் செய்த பாக்கியம். இன்றே சோழ மண்டலம் பெருமை பெற்றது!” என்று வணங்கி நின்றான் சோழ மன்னன்.

புலவர்களும் தலை தப்பித்தோம் என்ற நிலையில் நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். நான்கு கோடிப் பாடல்களின் கருத்துக்களும் நமக்காகத்தான் ஔவையார் பாடினார். பாடல் வழி நின்று பண்பும் அன்பும் மலர வாழ்வாங்கு வாழ்ந்து பேரின்பப் பெருவாழ்வை அடைவோமாக.

இதுதான் தமிழின் தன்மை. பாடலின் பண்பு. கவிஞர்களின் கருணை.

ராசிக்கேற்ற ஆலயம்

மேஷம்	–	இராமேஸ்வரம்
ரிஷபம்	–	திருப்பதி
மிதுனம்	–	பழநி
கடகம்	–	இராமேஸ்வரம்
சிம்மம்	–	ஸ்ரீ வாஞ்சியம்
கன்னி	–	திருக்கழுக்குன்றம்
துலாம்	–	திருத்தணி
விருச்சிகம்	–	காஞ்சிபுரம்
தனுசு	–	மயிலாடுதுறை
மகரம்	–	சிதம்பரம்
கும்பம்	–	தேவிப்பட்டிணம்
மீனம்	–	வைத்தீஸ்வரன் கோவில்

பஞ்ச பூத தலங்கள்

மண் (நிலம்)	–	காஞ்சிபுரம்
நீர்	–	திருவானைக்காவல்
தீ (நெருப்பு)	–	திருவண்ணாமலை
வாயு (காற்று)	–	காளத்தி
ஆகாயம்	–	சிதம்பரம்

சிவதரிசனம்

காலையில் சிவதரிசனம் அறச்சிந்தனை வளர்க்கும்.
முற்பகல் சிவதரிசனம் நற்செல்வம் தரும்.
மாலையில் சிவதரிசனம் விரும்பியதை அளிக்கும்.
இரவு சிவதரிசனம் ஞானத்தை அளிக்கும்
பிரதோசகால தரிசனம் தோச நிவர்த்தி, மீண்டும் பிறவாமையை தரும்.



பிள்ளையார் நோன்பு விளக்கம்

நாட்டுக்கோட்டை நகரத்தார்களாகிய நம், தனவணிகப் பெருமக்கள், தொன்று தொட்டுப்பிள்ளையார் வழிபாட்டை முறைப்படி செய்து வருகிறார்கள். நம் மரபினர் அனைவரும் பொதுவாக வைத்து வணங்கும் விநாயகரை "மரகத விநாயகர்" என்று கல்வெட்டுக்களும் வரலாற்று நூல்களும் குறிக்கின்றன. எடுத்த காரியங்கள் இடையூறின்றி நிறைவேறுவதற் பொருட்டுச் செய்யத்தக்க விநாயக வணக்கம் ஒவ்வொரு செயலுக்கும் முன்னிலையாக எல்லோராலும் மேற்கொள்ளப் பெறுவது போல, நகரத்தார்களாலும் மேற்கொள்ளப்பெறுமாயினும், சிறப்பாக ஆண்டுக்கொரு முறை மார்கழி மாதத்துச் சுக்கிலபக்ஷச் சஷ்டி நாளில், "பிள்ளையார் நோன்பு" என்னும் பெயரில் குடும்ப விரதமாக வழிபாட்டை நகரத்தார்கள் நிகழ்த்தி வருகிறார்கள். இவ்வழிபாடு எந்தக் காலத்தில் இவர்களால் மேற்கொள்ளப் பெற்றது என்று குறிப்பிட முடியாத பழைய காலத்திலிருந்து, நிகழ்ந்து வருகிறது. இவ்வழிபாட்டால் இவர்களுக்கு இறைவன் திருவருள் சித்திப்பது ஒருபுறம் இருக்க, ஏதாவது காரணம் பற்றிக் குடும்பத்தில் பிணக்குகள் ஏற்பட்டிருந்தால் அப்பிணக்குகள் தீர்ந்து ஒற்றுமை ஆவதற்கும், இது துணையாய் இருந்து வருகிறது. பாரத நாட்டு மக்கள் அனைவருக்கும் பொங்கல் விழா எப்படி இன்றியமையாததோ, அப்படியே, நகரத்தார்களுக்குப் பொங்கலும், பிள்ளையார் நோன்பு ஆகிய இரண்டும் இன்றியமையாதனவாய் இருக்கின்றன.

புராணங்களில் பிள்ளையார் வழிபாட்டிற்குச் சிறந்தனவாக, ஆவணி மாதத்துப் பூர்வபக்ஷச் சதுர்த்தியும் மார்கழி மாதத்துப் பூர்வபக்ஷச் சஷ்டியும் குறிக்கப் பெறுகின்றன. முன்னையது விநாயகப் பெருமான் திரு அவதாரநாள், பின்னையது, அவர் கஜமுகா சூரசம்ஹாரம் செய்து அடியார்களைக் காத்த நாள். இவ்விரண்டு நாட்களிலும் வழிபாடு செய்வது இன்ப ஆக்கம் துன்பநீக்கம், இரண்டையும் பெறுவதற்கென்று, பெரியவர்கள் சொல்லுவார்கள்.

நகரத்தார்கள் கொண்டாடும் பிள்ளையார் நோன்பு முறை சமூகம் முழுவதிலும் ஒரே அமைப்பில் இருப்பதால் நோன்பு நாள் மாலையில், விநாயகப் பெருமானது திரு உருவத்தை வீட்டில் புனிதமான இடத்தில் எழுந்தருளுவித்து நிவேதனத்திற்காக, எள், நெல், முதலியனவற்றாலான பொரி வகைகளும், பணியாரம் என்று நகரத்தார்களால் குறிப்பிடுகிற அப்பம் வகைகளும் வெல்லப்பாகுக் கடலை உருண்டை முதலியனவும் ஆசாரத்துடன் தயாரித்து, நிவேதித்து, ஆவரம்பூவால் செண்டு கட்டிச் சுவாமி திருமுன் வைத்து, ஆவரம் பூவினாலேயே அருச்சித்து, வேழமுகம் ஓதித் தோத்திரம் செய்து, இருபத்தொரு நூலிழைகள் கொண்ட திரியை, வெல்லம் சேர்ந்த அரிசிமா, திரட்டுப்பால், வாழைப்பழம் ஆகிய மூன்றில் ஏதேனும் ஒன்றில் சேர்த்து, பசு நெல் விளக்கில் ஏற்றி உட்கொண்டு நோன்பை நிறைவு செய்வது வழக்கமாக இருக்கிறது.

விநாயகப் பெருமானுக்கு, பொரி, கடலை, அப்பம், முதலியவற்றில் அதிக விருப்பம் என்பதால் அவற்றை நிவேதித்தும், இந்த நோன்பு திருக்கார்த்திகை தொடங்கி சதய நக்ஷத்திரம் வரை உள்ள இருபத்தொரு நாளில் அமையும் சஷ்டியில் கொண்டாடப் பெறுவதால் அவ் இருபத்தொரு நாட்களை நினைவு கூரும் வகையில் அமைந்த ஏற்ற இறக்கம் இல்லாத (ஒக்கப்பிறந்தவர் இருவர், உடன் பிறந்தவர் மூவர், செக்கச்சிவந்தவர் ஐவர், செவ்வாழைப் பழம் மூன்று, நமரி வாழைப்பழம் நான்கு, பச்சைப் பாம்புக்குட்டி ஒன்று,

படமெடுத்த பாம்புக்குட்டி மூன்று ஆக 21.) இருபத்தொரு இதழ்களே உடைய பொன் ஆவரம்பூவால், அருச்சிப்பதும், துன்ப நீக்கத்தைச் செய்வதாகிய விநாயகப் பெருமானது அங்குசத்தை, நினைவுபடுத்தும் வகையில் பூச்செண்டை அவர் திருமுன் வைப்பதும், விரதநாள் ஒவ்வொன்றுக்கும், ஒவ்வொரு ரக்ஷை (நூல்) யாக இருபத்தொரு ரக்ஷைகளைத் திரியாக ஒன்று கூட்டித் திருவிளக்கு ஏற்றுவதும் அந்த விளக்குக்கு ஆதாரமாக இனிப்புச்சுவைப் பொருள்களைக் கூட்டித் திருவருட் பிரசாதமாக உட்கொள்ளுவதும் இந்த நோன்புச் செயல்களில் அமைந்த தத்துவங்கள்.

திருநீறு

ஆறுமுக நாவலர்

1. சிவபெருமானை வழிபடுஞ் சமயத்துக்குப் பெயர் யாது?
   சைவசமயம்.
2. சைவசமயிக்க சரீரத்தில் ஆவசியகமாகத்தரிக்க வேண்டிய அடையாளம் யாது?
   விபூதி.
3. விபூதியாவது யாது?
   பசுவின் சாணத்தை அக்கினியினாலே சுடுதலால் உண்டாகிய திருநீறு.
4. எந்த நிற விபூதி தரிக்கத் தக்கது?
   வெள்ளை நிற விபூதி
5. விபூதியை எதில் எடுத்துவைத்துக்கொண்டு தரித்தல் வேண்டும்?
   பட்டு பையிலேனும், சம்புடத்திலேனும் எடுத்து வைத்துக் கொண்டு தரித்தல் வேண்டும்.
6. விபூதியை எந்தத் திக்கு முகமாக இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்?
   வடக்கு முகமாகவேனும், கிழக்கு முகமாக வேனும் இருந்து கொண்டு தரித்தல் வேண்டும்.
7. விபூதியை எப்படித் தரித்தல் வேண்டும்?
   நிலத்தில்சிந்தாவண்ணம் அண்ணாந்து, சிவசிவ என்று சொல்லி, வலக்கையின் நடுவிரல் மூன்றினாலும் நெற்றியிலே தரித்தல் வேண்டும்.
8. விபூதி நிலத்திலே சிந்தாமல் யாது செய்தல் வேண்டும்?
   சிந்திய விபூதியை எடுத்துவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்தல் வேண்டும்.
9. எக்காலங்களிலே விபூதி அவசியமாகத் தரித்துக்கொள்ள வேண்டும்.
   நித்திரை செய்யப்போகும்போது, நித்திரை விட்டெழுந்தவுடனும், தந்தசுத்தி செய்தவுடனும், சூரியன் உதிக்கும்போதும், அஸ்தமிக்கும்போதும், ஸ்நானஞ் செய்தவுடனும், போசனத்துக்குப் போகும்போதும், போசனஞ் செய்தபின்னும், விபூதி அவசியமாகத் தரித்துக் கொள்ளல் வேண்டும்.
10. ஆசாரியராயினும் சிவனடியாராயினும் விபூதி தந்தால் எப்படி வாங்கல் வேண்டும்?
    மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் நமஸ்கரித்து, எழுந்து கும்பிட்டு, இரண்டு, கைகளையும் நீட்டி வாங்கல் வேண்டும்.

11. விபூதி வாங்கித் தரித்துக் கொண்ட பின் யாது செய்தல் வேண்டும்?
முன்போல் மீண்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

12. சுவாமி முன்னும், குரு முன்னும், சிவனடியார் முன்னும் எப்படி நின்று விபூதி தரித்தல் வேண்டும்?
முகத்தைத் திருப்பி நின்று தரித்தல் வேண்டும்.

13. விபூதி தாரணம் எத்தனை வகைப்படும்?
உத்தூளனம், திரிபுண்டரம் என இரண்டு வகைப்படும்.

நாட்டுக் கோட்டை நகரத்தார் குலப்பெருமை

- ஈசனுக்கு, அம்மையும் – அப்பனும் தந்த குலம் நகரத்தார் குலம், நம் குலத்துதித்த காரைக்கால் அம்மையைச் சிவபெருமான் 'அம்மையே' என்றழைத்தார். நம் பட்டினத்தாருக்குச் சிவ பெருமானே குழந்தையாக வந்து மருதவாணன் என்ற பெயரில் வளர்ந்து, அவரை 'அப்பா' என்றழைத்தார்.
- பழங்கால மன்னர்களுக்குத் தலைநகரில் கோட்டைகள் இருந்தது போல், மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்ட நாட்டில், நம் முன்னோர்கள், கோட்டைகள் போலவே வீடுகள் கட்டிக் கொண்டு வாழ்ந்ததால் 'நாட்டுக்கோட்டைச் செட்டியார்கள்' என அழைக்கப்பட்டனர்.
- காஞ்சி நகரிலிருந்தும், புகார் நகரத்திலிருந்தும் வந்தவர்களென்பதால் நகரத்தார் எனப்படுகிறோம்.
- ஐயாயிரம்ஆண்டு சரித்திரப் பெருமையோடு, இதுவரை யாரும் மதம் மாறாத குலம்.
- பர்மா, மலேயா, இலங்கை, செய்கோன், சிங்கப்பூர் போன்ற நாடுகளின் முன்னேற்றத்தில் நம்மவர்களின் பங்கு மறக்க முடியாததும், மறைக்க முடியாததும் ஆகும்.
- முன்பு ஏழைகளே இல்லாத ஒரே இந்திய சமூகம். தொழில் இல்லாத செட்டியாரே இல்லை.
- மன்னர்களுக்கு முடி சூட்டும் உரிமை பெற்ற குலத்தவர்.
- மன்னர்களுக்கு அடுத்தபடியாக அதிகத் திருப்பணிகள் செய்தவர்கள்.
- மலேயா சுல்த்தான், தஞ்சை சரபோஜி, புதுக்கோட்டை ராஜா போன்ற மன்னர்களுக்கே பண உதவி செய்த சமூகம்.
- தென்னிந்திய மார்வாடிகள் என அழைக்கப்படுபவர்கள்
- இந்தியாவின் வங்கித் தொழிலின் முன்னோடிகள். வெளிநாட்டுப் பணப் பரிமாற்ற (Foreign Exchange) முறையை அறிமுகப் படுத்தியவர்கள்.
- பல்கலைக் கழகங்களை ஏற்படுத்திக் கல்விக்காக அதிகம் வாரி வழங்கிய சமூகம்.
- மூவேந்தர்களோடு ஒப்பிடும் அளவுக்குத் தமிழ் – தமிழிசைத் தொண்டு செய்தவர்கள்.

- 63 நாயன்மாரில் ஐவர் நகரத்தார் (இயற்கை நாயனார், அமர் நீதி நாயனார், மூர்த்தி நாயனார், கலிப்பகை நாயனார், காரைக்கால் அம்மையார்)
- ஐம்பெருங் காப்பியங்களுள், சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி ஆகிய மூன்றும் நகரத்தார் பற்றியது. (ஏனைய இரு காப்பியங்களாவன ; சீவக சிந்தாமணி, குண்டலகேசி ஆகியவையாகும்)

ருத்ராட்சம்

ருத்ராட்ச கொட்டை சிவனுடைய கண் என்று சாஸ்திரம் சொல்கிறது. இதை அணிவதால் காரிய சித்தி உண்டாகும். இதை பூனாக செய்து வழிபடுபவர்களுக்கு சகல நற்காரியங்களம் கைகூடும். சிவபாக்கியம், சிவலோகம், சிவ அருள் கிடைக்கும். இதன் ஒவ்வொரு கண்ணிற்கும் ஒரு குணமுண்டு.

****

பெறலாம்

தாயை நேசித்து அன்பை பெறலாம்
கடவுளை நேசித்து மோட்சம் பெறலாம்
நண்பனை நேசித்து நட்பை பெறலாம்
உறவினரை நேசித்து மகிழ்ச்சி பெறலாம்
எதிரியை நேசித்து அமைதி பெறலாம்
ஆதரவற்றோரை நேசித்து ஆசி பெறலாம்
பெரியவரை வணங்கி வாழ்த்து பெறலாம்
குழந்தையை நேசித்து பாச உணர்வை பெறலாம்
கடவுளை வணங்கி பக்தி உணர்வை வளர்க்கலாம்
வாழ்க்கையை நேசித்து வளம் பெறலாம்.
இல்லறத்தில் நல்லறம் செய்து இன்பம் பெறலாம்.

அஷ்ட பைரவர்கள்

சீர்காழியில் கோயில் கொண்டுள்ள பிரம்மபுரீஸ்வரர் கோயிலில் உள்ள வலம்புரி மண்டபத்தில் அஷ்டபைரவர்களும் காட்சியளிக்கின்றனர். அவர்கள்: லோக பைரவர், கால பைரவர், உக்கிர பைரவர், நின்மாண பைரவர், பீஷ்ண பைரவர், சுயேச்சை பைரவர், சுதந்திர பைரவர், பிச்சையா பைரவர் ஆகும்.

****

ஒப்பற்ற ஒக்கூருடையாரின் உயர்வான பிரளய ஊரணி

'திருப்பணிச் செல்வர்' - SLNS. நாராயணன்

காஞ்சியிலே கருவாகி, புகார் நகரிலே உருவாகி, பாண்டிய மன்னனின் பண்பட்ட பூமியாம் இளையாத்தக்குடியில் திருவானது தான் நம் நகரத்தார் இனம்.

இனப் பெருக்கம் குறைவானாலும், தனப் பெருக்கமும், மனப்பெருக்கமும் தன்னம்பிக்கையும் நிறம்பப் பெற்றவர்கள் தான் நகரத்தார் பெருமக்கள்.

அத்தகைய பண்பட்ட இனத்தவர்க்கு அஸ்திவாரமாக, ஆணி வேராக அச்சாணியாகத் திகழ்பவர்கள் இளையாத்தக்குடி நகரத்தார்கள்.

இயற்கை வளம்குன்றிய, ஆறுகள் ஓடாத, கடல்சூழாத, மலைகள்இல்லாத இயற்கை சீறமுடியாத, அமைதியான இடமாகத் தேடி, பலநூறு ஆண்டுகளுக்கு முன்பே,பாண்டிய மன்னனின் உறுதுணையால், அவன் முழுமனதோடு வாழ்த்திக்கொடுத்த புண்ணிய பூமி தான் இளையாத்தக்குடி.

மன்னரால் மனமார வாழ்த்திக் கொடுக்கப் பெற்ற மண்ணில், ஸ்ரீகைலாசநாதர்– ஸ்ரீநித்தியகல்யாணி அம்மனின் கருணையால் ஒன்று பலவாகி, ஏழு பிரிவாகி, ஒன்பது கோவில் நகரத்தார்களாய் ஏற்றமுடன் வாழத்தலைப் பட்டவர்கள் தான் நகரத்தார் சமூகம்.

புனித பூமியாம் இளையாத்தக்குடியில், புண்ணியவான்கள் தொட்டதெல்லாம் பொன்னாயிற்று, அடுத்துடுத்து வெட்டப்பெற்ற ஏழு குளங்களும், ஊருக்கு அணிகலனாய், அழகு செய்தன. ஜீவநதிபோல் ஊற்றுக்கள் கிளம்பின. ஏழு பிள்ளையார், ஏழு ஊரணி என்று, வேறெங்கும் இல்லாத, எழில்மிகு தோற்றத்தை கண்டது இளையாத்தக்குடி.

எட்டுத் தலையும், எண்ணாயிரம் பொன்னும் கேட்ட மன்னனுக்கு, ஏழு தலைகளையும், பொன்னையும் வேகமாகக் கொடுத்துவிட்டனர் நகரத்தார். ஒருதலையை, யார் கொடுப்பது என்று மயங்கிய நேரத்திலே, நாங்கள் கொடுக்கிறோம் என்று "ஒக்கூரார்" முன்வந்து, ஒருதலையைக் கூடுதலாகக் கொடுத்து, மன்னனையே அயரவைத்தனராம்.

இக்கட்டான சூழ்நிலையில், ஒக்கூரார் செய்தசெயல், அன்று உயர்வாகப் பேசப்பெற்று, இன்றும் சரித்திரமாகத் திகழ்கிறது, ஒக்கூர் உடையாராய் பிறந்தவர்க்கெல்லாம் உயர் நிலையைத் தருகிறது.

இன்றும், எந்த ஆலயத்திலும் மரியாதை செய்யும் பொழுது, "ஒக்கூர் உடையார்" என அழைத்து, முதல் மரியாதை செய்து கௌரவித்த பின்னரே, மற்றவர்க்கு என்ற நிலை உள்ளது. தலைகொடுத்த தலைமுறையில் வந்தவர்கள் என்ற பெருமையும் நம் பிரிவினருக்கு உள்ளது. எல்லாவற்றிலுமே ஒக்கூர் உடையார் முதன்மை பெற்றவர்களே.

அம்மை அப்பன் ஆலயத்திற்கு மிக அருகிலே, மிகப் பெரிய அளவில், நம் கைலாச விநாயகர் திகழ்கிறார். சதுரமான பீடத்தில், வட்டமான இருக்கையில், நான்கு கரங்களுடன், அமர்ந்த கோலத்தில் அருள்பாலிக்கிறார்.

செட்டிநாட்டு நகரக்கோவில் ஊர்களில், வேறு எந்த ஊருக்கும் இல்லாத எழில்மிகு ஊரமைப்பு, இளையாத்தக்குடிக்கு உண்டு.

இளையாத்தக்குடியிலே, கிழக்குப் பார்த்து இருப்பது கைலாச விநாயகர் ஆலயம். அதனருகே, கணபதி ஒம மண்டபம், மேற்கு பார்த்து இருப்பது ஒக்கூரார் விடுதி, இடையிலே அமைந்தது

பிரளய ஊரணி, விடுதியின் பின்புறம் வயல் வெளியும், தென்னந்தோப்பும் இடப்பாகம் புளியந்தோப்பு என அடுக்கடுக்காக, அழகான அமைப்புடன் திகழ்வதே "இளையாத்தக்குடி ஒக்கூர் நகரத்தார் அஸோஸியேஷன்"

பெரியகோவிலின் முன்புறத்தே, மிகப் பெரிய கல்கட்டு ஊரணியாகத் திகழ்வது, ஒக்கூருடையாருக்குச் சொந்தமான, "பிரளய ஊரணி" 12.6.1927 லேயே ரூ.1.25லட்சம் சிலவில், கல் திருப்பணியாகச் செய்யப்பெற்றது. சுமார் 6 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. ஏழு அலங்கங்களைக் கொண்ட எழில்மிகு ஊரணியாகும் .

எந்த வறட்சியிலும் வற்றாத பொய்கையாகத் திகழ்கிறது. ஊர்மக்களின் தாகத்தைத் தீர்க்கும் "நாழிக்கிணறு" ஆக, அள்ள அள்ளக் குறையாத அற்புத ஊற்றாகத் திகழ்கிறது. கடந்த நான்கு ஆண்டுகால வறட்சியிலும், நல்ல தண்ணியை ஊர்மக்கள் அள்ளிக் குடிக்க உதவிய அமிர்த கலசமாக விளங்குகிறது.

புனிதர் காஞ்சிப் பெரியவரின் மனதைக் கவர்ந்த பூம் பொழில், ஊருக்கு எழில்சேர்ப்பதாகவும், உயிரினங்களுக்கு உதவியாகவும், ஒக்கூருடையாருக்கு உயர்வாகவும் திகழ்கிறது.

பசும்புல் நிறைந்த ஏழுநிலையும், பந்தடிக்கும் மைதானம் போல இருந்தாலும் பார்ப்பதற்கு எழில் மிகு காட்சியாக உள்ளது. நாலு படித்துரைகளின் இருமருங்கிலும் யானைகள் அலங்கரிக்க, சிம்மத்தின் வாயிலிருந்து சீரிவரும் நீராக வருத்து மடவாய் அமைக்கப் பெற்றுள்ளது. நாற்புறச் சுவர்களிலும் அகல்விளக்கு மாடங்கள் அழகு செய்ய நகரத்தாரில் கல் திருப்பணிக்கு கட்டியம் கூறுவதாக அமைந்துள்ளது நம் "பிரளய ஊரணி"

அத்தகைய அழகான ஊரணி பல்லாண்டுகாலமாக, சுத்தம் செய்யப்படாமல், பாசமும், செம்மண்ணும் படிந்த நிலையில், நீர்வரத்து இல்லாமல் இருந்தது. சமீபத்தில் திருப்பணி நடந்த பொழுது, வண்டலை அகற்றி, தூர்வாரி, களைஎடுத்து சுத்தம் செய்யப் பெற்றது. கல்கட்டு முழுவதும் எந்திரத்தின் உதவியால் சான்பிளாஸ்ட் செய்யப் பெற்று, கட்டமைப்பு சந்து பதியப்பெற்றது. வெளிக்கம்பி அடைப்புக்கு சில்வர் பெயிண்ட் அடிக்கப் பெற்றது. படித்துறைகள் அனைத்திற்கும், கால்நடை புகா வண்ணம் கம்பி அடைப்புச் செய்யப் பெற்றது.

இவை அனைத்தையும் விட முக்கியமாகக் கருதப்பெற்ற, நீர்வரத்துக்கும் வழி செய்யப்பெற்றுள்ளது. ஒக்கூராருக்குச் சொந்தமான, தோப்பு, வயல்வெளி, காலி இடம், புளியந்தோப்பு முதலிய இடங்களில் பெய்யும் மழை நீரை கொண்டுவர, மண்வாரி எந்திரத்தின் உதவியோடு வாய்க்கால் எடுத்து, வடிகால் அமைத்து, நீர்ப்பிரளி இடத்தில் விழும் நீரெல்லாம் கலுங்கு வழியாகவே பிரளய ஊரணிக்கு வரும்படி செய்துள்ளது. மேலே கண்ட வேலைகள் அனைத்தையும் செய்து முடிக்க லட்சங்கள் சிலவாகி உள்ளது.

இவை அனைத்தும் செய்து முடித்த பின்னர், நம் கைலாச வினாயகருக்கு 21.6.2004 திங்கட்கிழமை, குடமுழுக்குவிழா நடந்தபொழுது திரளாக வந்த நம் பங்காளிகள் அனைவரும் கண்டு மகிழ்ந்தனர். அடுத்து, 30.6.2004உ புதன்கிழமை, பெரியகோவில் குடமுழுக்குவிழா நடந்த பொழுது வந்த பக்த கோடிகள் அனைவருமே பிரளய ஊரணியின் எழிலைக் கண்டு வியந்தனர். ஒக்கூருடையாரின் "பிரளய ஊரணி" ஊருக்கே அழகு சேர்ப்பதாக பேசப்பெற்றது.

16.7.2004 ஆடி முதல் வெள்ளி, அமாவாசை அன்று இரவு, பெய்த பெருமழையால், நம் ஊரணிக்கு பல ஆண்டுகளுக்குப் பிறகு திரளான வெள்ளம் திமுதிமுவென வந்தது. அந்த ஒரே மழையில், ஒரு அலங்கம் நிறைந்தது. ஆடி வெள்ளியில் அற்புதத் தொடக்கம் என ஊரே புகழ்ந்தது. உள்ளம் குளிர்ந்தது. அடுத்தடுத்து மழை பொழியவும், ஆளோடி வரை நீர்ததும்பவும், கைலாச வினாயகரை கை தொழுவோமே.

மாதா, பிதா, குரு, தெய்வம்

-ஸ்வர்ண வெங்கடேச தீட்சிதர்

மஹாராஷ்டிர மாநிலத்தில் பண்டரீபுரம் ஒரு புண்ணிய ஸ்தலம். பலருக்குத் தெரிந்திருக்கும். அங்கு ஸ்ரீ கிருஷ்ணனும், ருக்மணியும், பாண்டுரங்கன் – ரகுமாயி என்ற பெயருடன் பக்தர்களுக்கு அருள் தந்துக்கொண்டிருக்கிறார்கள். வரலாறு கண்ட ஸ்தலம். எத்தனையோ பக்தர்களின் சரித்திரங்கள் இந்த பூமியுடன் பிணைந்திருக்கிறது.

அங்கு அந்த கிருஷ்ண தம்பதிகள் இடுப்பில் இரு கைகளையும் வைத்துக் கொண்டு ஒரு செங்கலின் மேல் நின்று கொண்டு காட்சி தருகிறார்கள். ஏன் இந்தக் கோலம்? அதற்கு ஒரு சுவையான புராணப் பின்னணி கதை உண்டு. ஒரு தூய்மையான பக்தனின் உயர்வையும் பெற்றோர்களுக்குச் செய்யும் சேவையின் மகத்துவத்தையும் உலகத்திற்கு உணர்த்துவதற்காக கண்ணன் புரிந்த லீலைகளுள் ஒன்று.

வெகு காலத்திற்கு முன் புண்டரீகன் என்றொருவன் இருந்தான். திமிர் பிடித்தவன். தன் மனைவியுடன் சந்தோஷமாக வாழ்ந்துவந்தான். பெற்றோர்களைத் திரும்பியும் பார்க்கமாட்டான். அவர்கள் பசியில் வாடினார்கள். மனம் நொந்த பெற்றோர் ஜீவனத்திற்கு வழிதேட காசிக்குச் சென்றார்கள். இறந்தாலும் காசியில் உயிர் துறப்போம் என்பது அவர்கள் எண்ணம் காசியில் கொண்டுவிட்டு விடும்படி மகனிடம் கெஞ்சினார்கள். பலன், தகாத வார்த்தைகளால் மகனுடைய ஏச்சுத்தான் கிடைத்தது.

இப்படிப்பட்ட பிள்ளையுடன் இருந்து வாழ்வதைவிட சாவதே மேல் என்கிற முடிவுக்கு வந்தார்கள். காசிக்குக் கால்நடையாகச் சென்றார்கள்.

சில நாட்கள் சென்றன.மகனுக்கும் காசிக்குப் போகிற ஆசை வந்தது. அழகான இரு குதிரைகளைக் கொண்டு வந்து. தனக்கும், தன் மனைவிக்குமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொண்டு, குதிரைமேல் அமர்ந்து சென்றான். வழியில் நடந்துபோய் கொண்டிருந்த தன் வயதான பெற்றோர்களைக் கண்டும் காணாதது போல் அவர்களைத் தாண்டிக்கொண்டு வேகமாகச் சென்று விட்டான்.

ஒருநாள், காட்டு வழியே போய்க் கொண்டிருந்தபோது, இவனுக்குத் திசை தடுமாறி, வழி தெரியாமல் போய்விட்டது. இரவு நெருங்கிக் கொண்டிருந்தது. இரவில் தங்குவதற்கு ஏதேனும் இடம் கிடைத்தால், பொழுது விடிந்ததும் வழியைத் தேடிக் கண்டுபிடித்துக் கொண்டு போகலாம் என எண்ணினான். சுற்று முற்றும் அலைந்தான். ஓரிடத்தில் ஒரு ஆசிரமம் கண்ணில் தென்பட்டது.

அருகே சென்றதும் அங்கிருந்த ஒரு ரிஷி இருவரையும் அன்புடன் வரவேற்று, உபசரித்து, ஆகாராதிகள் செய்துவைத்து, இரவு தங்குவதற்கு ஏற்பாடுகளையும் செய்து கொடுத்தார். அவரிடம் புண்டரீகன், வாரணாசிக்குப் போகும் வழியைக் கேட்டான். தனக்குத் தெரியாது என்று அவரிடமிருந்து பதில் வந்தது.

'என்ன, காசிக்கு இவ்வளவு அருகாமையில் இருந்தும்கூட அங்கு போகும் வழி உங்களுக்குத் தெரியாதா?' என மிகவும் ஏளனத்துடன் கேட்டான் புண்டரீகன். அதற்குப்

பதிலேதும் சொல்லாமல் வாளாவிருந்துவிட்டார் அந்த ரிஷி. அதன் பின்னர் அனைவரும் உறங்கச் சென்றார்கள்.

மறுநாள். இன்னும் பொழுது விடியவில்லை. வாசலில் சில பெண்கள் பேசும் குரல் கேட்டுக் கண் விழித்தான் புண்டரீகன். ஆர்வத்துடன் என்ன வென்று காணச் சென்றான். அங்கு மூன்று பெண்கள், கோரமான உருவத்துடனும், சோகையுடன் கூடி வெளுப் பேறிப் போன உடலுடனுன், ரிஷியின் ஆசிரமத்து வாசலில் பெருக்கி, மெழுகி, கோலம்போட ஆயத்தம் செய்துகொண்டிருந்தார்கள்.

இவன் பார்த்துக்கொண்டிருக்கையிலேயே, மூவரும் கோலம் போட்டு முடிக்கவும், அவர்களது உருவம் மிகவும் அழகாக மாறி, உடலிலிருந்து ஒளி வீசும் தெய்வீக சோபையுடன்கூட, ஆசிரமத்தைவிட்டு வெளியேறத் துவங்கினார்கள். புண்டரீகனுக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. ஒரே ஆச்சரியத்துடன் ஒடி அவர்களை அணுகி,'நீங்கள் யார்?" எதற்காக இங்கு வந்து, வாசலைப் பெருக்கி, மெழுகி, கோலம் போட்டீர்கள்?' என்று கேட்டான்.

அந்தப் பெண்கள் சொன்னார்கள் "நாங்கள் கங்கை, யமுனை, சரஸ்வதி, ஆவோம். நீராட வரும் பக்தர்கள் எங்களிடம் விட்டுச் செல்லும் பாவங்களைக் கழுவிக் கொள்வதற்காக தினமும் இந்த ரிஷியின் ஆசிரமத்துக்கு வந்து வாசல் பெருக்கி, மெழுகி, கோலம் போட்டுச் செல்கிறோம். இப்படிச் செய்வதனால் பாப மூட்டைகளின் கனத்தினால் எங்கள் சரீரம் அடையும் விகாரம் நீங்கி, மறுபடியும் திவ்ய ஸ்வரூபம் கிடைக்கப் பெறுகிறோம்".

"இந்த ரிஷிக்கு அப்படி என்ன மகிமை?" என்று கேட்டான் புண்டரீகன்.

"இவர் வாழ்நாள் முழுதும் தன் பெற்றோர்களுக்கு சேவை செய்ய வேண்டும் என ஒரே குறிக்கோளுடன் வாழ்ந்து, கடைசிவரை அவர்களை அன்புடன் பேணிப் பாதுகாத்து, எல்லா விதமான பணிவிடைகளும் செய்து, மிகுந்த புண்ணியம் சம்பாதித்தவர். இவருக்காகச் செய்யும் இந்தச் சிறிய கைங்கர்யத்தினால் எங்களை அடையும் பாபங்கள் அழிந்துவிடுகின்றன என்றால், அவருடைய தவ வலிமையைப் பற்றி வேறு என்ன கூற வேண்டும்?" என்ற கங்கையும், யமுனையும், சரஸ்வதியும் "நீ மகா பாபி. ஆனாலும் உன் பெற்றோர்களுடைய புண்ணிய பலத்தினால் உனக்கு இந்த மகானைக் காணும் வாய்ப்பும், அவருடைய ஆசிரமத்தில் ஒரு இரவு தங்கும்படியான பாக்கியமும், அதன் மூலம் எங்கள் மூவரது தரிசனமும் கிடைத்துள்ளன. இனியாகிலும் நல்லவனாக இருந்து, உன் பாபங்களைப் போக்கிக்கொள்ளத் தகுந்த வழிமுறைகளைத் தேடி அடைவாய்" என்று கூறியபடியே சென்றுவிட்டார்கள்.

புண்டரீகனுக்குப் பூர்வ புண்ணிய விசேஷத்தினால் அவர்கள் சொன்னதைக் கேட்ட மாத்திரத்தில் புத்தி தெளிந்துவிட்டது.'ஐயோ என்ன காரியம் செய்துவிட்டேன். என்னைப் பெற்றவர்களைக் கொடுமைப்படுத்தி, அவர்கள் மனம் நோகும்படிச் செய்துவிட்டேனே' என்று கதறி அழுதபடி குதிரையில் ஏறி வந்த வழியே பெற்றோர்களைத் தேடிச் செல்லலானான்.

பின் அவர்களைக் கண்டு பிடித்து குதிரையின் மேல் அமர்த்தி அழைத்து வந்து ரிஷியைக் கண்டு, அவரையும் பணிந்து, அவரது ஆசீர்வாதங்களையும் பெற்றுக்கொண்டு

எல்லோருமாகக் காசிக்குச் சென்று கங்கையில் நீராடி, ஊருக்குத் திரும்பித் தங்கள் இல்லம் சேர்ந்தார்கள்.

அதன் பின்னர் புண்டரீகனுக்குத் தன் வாழ்க்கையின் லட்சியமே பெற்றோர்களுக்குச் சேவை செய்வது தான் என்று ஆகிவிட்டது.

மனைவியுடன் கூடி, பெற்றோர்களைக் கண்ணும் கருத்துமாகப் பேணி, அவர்களையே தெய்வம் என எண்ணி, ஸ்ரீ கிருஷ்ணனும் – ருக்மணியும் போலவே பாவனை செய்து, அவர்களுக்கு எல்லாவித சிஷ்ருஷைகளும் செய்து, அவர்களது ஆசியுடன் மகிழ்ச்சியாக வாழலானான். கண் பார்வை மறைந்து, காது கேளாமல் போன நிலையிலும் கூட அவனது பெற்றோர்கள் மகனின் பணிவிடைகளினால் மனம் குளிர்ந்து, எந்நேரமும் ஈஸ்வர சிந்தையுடன் வாழ்நாட்களைக் கழித்துக் கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் இரவு நேரம். பலத்த மழை பெய்த வண்ணம் இருந்தது. புண்டரீகன் தன் பெற்றோர்களுக்குக் கால் பிடித்துக் கொண்டிருந்தான். வாசல் கதவை யாரோ தட்டும் சப்தம் கேட்டது. 'யாரது'? என்று குரல் கொடுத்தான் புண்டரீகன்.

'நான் தான் நீ வணங்கும் ஸ்ரீ கிருஷ்ணன். கூட ருக்மணியையும் அழைத்து வந்திருக்கிறேன்' என்று பதில் சொன்னான் வாசலிலிருந்து கண்ணன்.

பெற்றோர்கள் உறங்குவதற்காகக் காத்திருந்த புண்டரீகன், 'கொஞ்சம் இரு, இதோ, வருகிறேன்' என்று கூறினான்

'பலத்த மழை பெய்கிறது புண்டரீகா, நனைந்து கொண்டிருக்கிறோம். சீக்கிரம் கதவைத் திற' என்றான் மறுபடியும் கண்ணன்.

'பெற்றோர்களுக்குக் கால் பிடித்துக் கொண்டிருக்கிறேன். பாதியில் விட்டு வர முடியாது. சிறிது நேரம் அப்படியே ஒதுங்கி நில்லுங்கள்' என்று சொன்னான் புண்டரீகன்.

சிறிது நேரத்தில் மீண்டும் சீக்கிரம் கதவைத் திற, வெள்ளம் வந்துவிட்டது. தண்ணீரில் நிற்க முடியவில்லை என்றான் கண்ணன்.

'வெள்ளம் வந்தால் அங்கே அருகில் இருக்கும் செங்கல்லைப் போட்டுக்கொண்டு, அதன்மேல் ஏறி நில்லுங்கள்' என்றான் புண்டரீகன்.

அப்படியே செய்தார்கள் ஸ்ரீ கிருஷ்ணனும் ருக்மணியும். பலத்த மழை காரணமாக விறுவிறுவென்று ஏறிக்கொண்டே வந்தது வெள்ளம், இருவரும் இடுப்பளவு என்பது போல கையை இடுப்பில் வைத்துக் கொண்டதும், அதற்குமேல் ஏறாமல் நின்றுவிட்டது வெள்ளம்.

பின்னர் தன் பெற்றோர்கள் உறங்கிவிட்டார்கள் என்பதை உறுதி செய்துகொண்டு எழுந்துவந்த புண்டரீகன், கதவைத் திறந்து, இடுப்பளவு ஜலத்தில் நின்றுகொண்டிருந்த இறைவனையும், இறைவியையும் உள்ளே அழைத்துச் சென்றான்.

'என்ன புண்டரீகா, நானே வந்து கதவைத் தட்டி அழைத்தும்கூட உடனே வந்து திறக்காமல் இத்தனை நேரம் எங்களை வாசலிலேயே நிற்க வைத்துவிட்டாயே?' என்று

கேட்ட ஸ்ரீ கிருஷ்ணனிடம், 'எனக்குத் தெரியாதா கண்ணா, நான் பெற்றோர்களுக்குச் செய்து வந்த சேவையின் மகிமைதானே ஜகத்ரக்ஷகனாகிய உன்னை இங்கே இழுத்து வந்திருக்கிறது. அப்படியிருக்க, நான் பெற்றோர்களுக்குச் செய்து கொண்டிருந்த பணிவிடையைப் பாதியில் நிறுத்திவிட்டு எப்படி வந்து கதவைத் திறக்க முடியும்? இருந்தாலும் மன்னித்துக்கொள். எங்கள் அனைவருக்கும் அருள் புரிவாய்' என்று பணிவுடன் கூறி வணங்கினான் புண்டரீகன். பகவானின் அனுக்ரஹத்தையும் பெற்றுக் கொண்டான்.

பக்தனுடைய வேண்டுகோளுக்கு இணங்கி, இன்றும் அதே நின்ற திருக்கோலத்தில் இடுப்பில் கைகளை வைத்துக்கொண்டு, செங்கல்லின் மேல் நின்றபடி அனைவர்க்கும் தரிசனம் கொடுத்துக்கொண்டு அருள் பாலித்துக் கொண்டிருக்கிறார்கள் ஸ்ரீ கிருஷ்ணனும் ருக்மணியும் என்பது கதை.

நமக்கு முக்கியம் கதையல்ல. அதன் கருத்தே. அன்போடு, பணிவோடு தன்னைப் பெற்றவர்களுக்கு ஒருவன் செய்யும் பணி விடைகளின் மூலம் பகவானையே அடையலாம். அப்படிப்பட்ட உண்மையான பக்தனுடைய பக்திக்குக் கட்டுப்பட்டு, இறைவன் தானே கீழிறங்கி வந்து, சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாது காத்திருப்பான், காத்திருந்து அருள் புரிவான் என்பதே நாம் உணர வேண்டிய உண்மையாகும்.

இன்றைய நிலையிலும் எத்தனையோ பக்தர்கள் அவரவர் வாழ்க்கையில் வெவ்வேறு கட்டத்தில் இறைவன் உடன் இருந்து அருள் புரிவதைக் கண்டு, அனுபவித்து வருகிறார்கள். அத்தகைய அனுபவங்களைப் பொக்கிஷங்களாகக் கருதிப் பலர் வெளியில் சொல்வதில்லை என்றாலும், இத்தகைய அனுபவங்கள் உண்மையான பக்தர்களுக்கு நேர்ந்துகொண்டுதான் இருக்கின்றன. இதன் அருமையும், பெருமையும், உணர்ந்து அனுபவித்தவர்களுக்கே புரியும்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்பது தொன்று தொட்டு நம் பள்ளிக்கூடங்களில் குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டு வருவதாகும். இன்றும்கூட பாலர் பாடப் புத்தகங்களில் இருக்கும் என எண்ணுகிறேன்.

"மாதா, பிதா, குரு, தெய்வம்" என்றும் கூறுவதுண்டு. இதற்கு இரண்டு விதமாக அர்த்தம் கொள்வது மரபு. அதாவது, அன்னை, தந்தை, ஆசான் இவர்கள் மூவரும் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள் என்பது ஒன்று, இரண்டாவதாக, முதலில் அன்னை, பின் தந்தை, அதன்பின் ஆசான், கடைசியில் கடவுள் என்று நாம் வணங்க வேண்டிய முறையைக் காட்டுவதாகச் சொல்வதுண்டு.

இன்று கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குவது என்பது ஒரு ஃபாஷன் போலாகிவிட்டது. சாதாரண ஏழை ஜனங்களிலிருந்து, நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த மக்கள், பெரும் தனிகர்கள் மற்றும் பெரிய பதவியில் இருப்பவர்களும், அரசியல்வாதிகளும்கூட கோயிலை நோக்கிப் படை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். சந்தோஷப்பட வேண்டிய விஷயம்தான். ஆனாலும், சிந்தித்துப் பார்க்கும் பொழுது, கடைசியாகச் சொல்லப்பட்டதான கடவுளை வணங்குவது என்பதில் எத்தனை பேர் முறையான வழியில் அன்னை, தந்தை, ஆசான் இவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்து வருகிறார்கள் என்பது யோசிக்க வேண்டிய விஷயமாக உள்ளது.

மாறிவிட்ட சமுதாயச் சூழ்நிலையில் இன்றைய பெற்றோர்கள் தம் மக்களைச் சார்ந்து இருந்தல் கூடாது என்று நினைப்பதும், அதற்குத் தருந்தபடி முன்னேற்பாடுகள் செய்து கொள்வதும் நடந்து வருகின்றன. ஆனால் இப்படி இல்லாமல், பெற்ற குழந்தைகளுக்காகத் தன் சொத்து, சுகம் அனைத்தையும் பணயம் வைத்து, அவர்களை ஆளாக்கி விட்டுப் பின் அவர்களால் புறக்கணிக்கப்பட்டு கஷ்டத்தில் உழலும் வயதான பெற்றோர்களையும் கண்டு கொண்டிருக்கிறோம். இது எத்தனை கொடியது? இப்படிப்பட்ட மக்கள் கோயிலுக்குப் போவதனாலோ, வேறு தான தர்மங்கள் செய்வதனாலோ, ஏதேனும் பலன் கிடைக்குமா என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும்.

இன்னொரு விஷயமும் கவனிக்க வேண்டும். சிலர், வளர்த்து ஆளாக்கி விட்ட பெற்றோர்களுக்கு பணமும், பொருளும் கொடுத்து, ஒரு வசதியான வாழ்க்கையை அமைத்துக் கொடுக்க வேண்டியதே தம் கடமை என்றெண்ணி, அத்துடன் தமது நன்றிக் கடன் முடிந்து விட்டது என நினைக்கிறார்கள். இது எத்தனை மடமை? "அன்பு" என்பது இன்று மிகவும் அரிதாகவே கிடைக்கக் கூடிய ஒன்றாக ஆகிக் கொண்டிருப்பது வேதனைக்குரிய விஷயமாகும். "அன்பே சிவம்" என்று கூறுகிறோம். ஆனால் 'அன்பு' என்பது என்னவென்று புரிந்து கொள்ளாமல், பெற்ற தாய் தந்தையிடமே அன்பைக் காட்ட முடியாவதர்களால், 'சிவம்' அதாவது தெய்வம், எப்படி அடையக்கூடிய ஒன்றாக ஆகமுடியும் என்பதை இப்படிப்பட்டவர்கள் சிந்திக்க வேண்டும்.

'சிவம்' என்பதற்கு மங்களம் என்றும் பொருள் உண்டு. ஆகையால் அன்பில்லாதவர்களுக்கு, அதுவும் தம்மைப் பெற்று, வளர்த்து, ஆளாக்கிவிட்ட பெற்றோரிடம் அன்புகாட்டாத மக்களுக்கு, நிலையான மங்களம் எதுவும் வாழ்வில் சேராது என்பதும் உணரப்பட வேண்டியதாகும்.

இன்று பரவலாக பேசப்படும் ஒரு வார்த்தை "தலைமுறை இடைவெளி". மாறிவரும் சமுதாயச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப, பெற்றோர்களும் தங்களது கண்ணோட்டத்தையும், எதிர்பார்ப்புகளையும், மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம் என்பது மறுக்க முடியாத உண்மை. ஆனால் "தலைமுறை இடைவெளி" என்பது என்றுமே உள்ளதும், இன்றைக்கும் இருந்து கொண்டிருப்பதும், நாளையும் இருக்கப் போவதுமான ஒன்றாகும் என்பதை நாம் மறக்கலாகாது.

சில பெற்றோர்களும் தவறு செய்கிறார்கள். ஆனாலும், அவர்களிடம் பணிவோடு, அன்போடு பேசி, அவர்களது கூற்று இந்தக் காலத்தில் நடைமுறைக்கு ஒவ்வாதது என்று எடுத்துச் சொல்ல வேண்டுமே தவிர, அவர்களது தவறையே காரணம் காட்டி அவர்களைப் புறக்கணிப்பது சரியல்ல.

பெற்றோர்களது ஆசிகளே மக்களுக்குப் பெரிய நிதியாகும் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். பெற்றவர்கள் மனம் குளிர்ந்து செய்யும் ஆசீர்வாதங்கள் மக்களுக்கு ஒரு கவசம் போல் இருந்து அவர்களை எவ்வித ஆபத்ததுகளிலிருந்தும் காக்கக்கூடிய தன்மை வாய்ந்தனவாகும். மாறாக பெற்றோர்கள் தம் மக்கள் செய்கையினால் மனம் நொந்து போகும்பொழுது. அவர்கள் வெளியில் சொல்லாவிடினும் கூட, அது மக்களை கட்டாயம் பாதிக்கும் என்பதும் உண்மையாகும்.

மக்கள் அனைவரும் இந்த உண்மைகளை எல்லாம் ஆழ்ந்து ஆராய்ந்து உணர்ந்து மாதா, பிதா, குரு, தெய்வம் இவர்களைப் போற்றி வணங்கி, அவரவர் மனம் போல எல்லா நலன்களையும் அடைய வேண்டும் என எனது இஷ்ட தெய்வமான நடராஜரை வணங்கி பிரார்த்தனை செய்கின்றேன்.

பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது!

-நாடோடி

“பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்தது” என்னும் பழமொழியைப் பற்றி நாம் பொதுவாகக் கொள்ளும் பொருள் என்னவென்றால், “பிள்ளையார் சதுர்த்தியன்று, நாம் களி மண்ணால் பிள்ளையாரைப் போன்ற ஒரு உருவம் அமைக்க முயலுகிறோம். அது சரியாக வராமல், குரங்கு உருவை அடைகிறது” என்பது.

இந்தக் கருத்து தவறு என்று சொன்னார், ஜயராமசர்மா, சென்னை, அலர்மேல்மங்காபுரம், குரு கைங்கர்ய சபாவில் நிகழ்த்திய, மகாபாரதச் சொற்பொழிவின்போது.

எத்தனையோ பழமொழிகளை, நாம் இது மாதிரித்தான் தவறாகப் புரிந்து கொண்டுள்ளோம். உதாரணத்துக்கு, “கள்ளனை நம்பினாலும் குள்ளனை நம்பக் கூடாது” என்னும் பழமொழி. குள்ளமாக உள்ளவர்கள் எல்லாம் ஏமாற்றுகிறவர்கள் என்று இதற்குத் தவறாகப் பொருள் கொள்கிறோம். உண்மையில் இதன் பொருள் என்னவென்றால், “கிருஷ்ணனை நம்பினாலும் வாமனனை நம்பக்கூடாது” என்பது.

“பிள்ளையார் பிடிக்க” என்பதின் பொருள் என்னவென்றால் எந்தக் காரியத்தை ஆரம்பித்தாலும், முதலில் பிள்ளையார் பூஜையுடன் ஆரம்பிக்க வேண்டும். பிறகு அனுமார் பூஜையுடன் முடிக்க வேண்டும் என்பது.

மகாபாரதக் கதை பிள்ளையாருடன் ஆரம்பிக்கிறது. மகாபாரதக் கதையைப் பற்றிய சுலோகங்கள் வியாசர் மனதில் பொங்கி வழிகின்றன. இதை யாரைக் கொண்டு எழுதச் சொல்லலாம் என்று நினைக்கையில் அப்பொறுப்பை பிள்ளையார் ஒப்புக் கொள்கிறார்.

“நான் சொல்லும் வேகத்துக்கு உம்மால் எழுத முடியுமா?” என்று கேட்கிறார் வியாசர்.

“நான் எழுதும் வேகத்துக்கு உம்மால் சொல்ல முடியுமா?” என்று கேட்கிறார் பிள்ளையார்.

இப்படி இருவரும் போட்டி போட்டுக்கொண்டு நமக்கு அருளியது தான் மகாபாரதம். இதில் சொல்லப்படாதத் தர்மங்களே இல்லை. பிள்ளை யாரோடு ஆரம்பித்த மகாபாரதம் அனுமாரோடு முடிகிறது. யுத்தம் முடிந்ததும், அர்ச்சுணனை முதலில் இறங்கச் சொல்லி விட்டுப் பிறகு தாம் ரதத்திலிருந்து இறங்குகிறார் கிருஷ்ணர். கிருஷ்ணர் இறங்கியதுதான் தாமதம், ரதத்தின் கொடியில் இருந்த அனுமன் மறைகிறார். உடனே ரதம் தீப்பற்றி எரிகிறது.

திரு அருள் இல்லையேல்...

-நாடோடி

ஒருவன் எவ்வளவோ கெட்டிக்காரனாக இருக்கலாம். காரியம் வெற்றியடைய தீவிர முயற்சி செய்யலாம். ஆனால், திரு அருள் இல்லையேல், பகவானுடைய அனுக்கிரகம் இல்லையேல், வெற்றி காண முடியாது. பகவானை வேண்டிக் கொண்டால்தான், அவனிடம் நம்பிக்கை வைத்தால்தான், அவனுடைய அருள் நமக்குக் கிடைக்கும். இது எத்தனை உண்மை என்பது திரௌபதியின் சுயம்வரக் கதையிலிருந்து தெரிகிறது.

திரௌபதியின் கையைப் பிடிக்க, சிசுபாலன், ஜராசந்தன், சல்லியன், துரியோதனனை, கர்ணன் போன்ற பல வீரர்கள் சுயம்வர மண்டபத்தில் குழுமியுள்ளனர். அவர்கள் ஒவ்வொருவராகச் சென்று வில்லை நாணேற்றப் பார்க்கிறார்கள். வில்லுக்கும் நாணுக்கும் இடையில் ஒரு எள் அளவுதான் இடைவெளி இருக்கும். அப்பொழுது திடீரென்று வில் நிமிர, அவர்கள் கீழே அடித்துத் தள்ளப்படுகிறார்கள்.

ஆனால் அதே வில்லை நாணேற்ற, அந்தணன் உருவில் இருந்த அர்ச்சுனன் எப்படி நடந்து கொள்ளுகிறான் என்று பாருங்கள்!

அவன் முதலில் அந்த வில்லை வலம் வருகிறான்; அவனுக்கு வெற்றி தேடி கொடுக்கப்போவது அந்த வில்தானே? அதனால் அதை வணங்குகிறான். பிறகு தலையைக் குனிந்து சிவபெருமானை வேண்டிக் கொள்ளுகிறான். அதற்கும் பிறகு கிருஷ்ணனை மனத்தினால் நினைக்கிறான். பிறகுதான் வில்லை நாணேற்றுகிறான். பிறகுதான் வில்லை நாணேற்றுகிறான். இலக்கை அம்பினால் சேவிக்கிறான். கிருஷ்ணன் அருள் இன்றி, தனக்கு வெற்றி கிடைத்திருக்காது என்று அர்ச்சுனனே பின்னர் ஒப்புக்கொள்ளுகிறான். இது பாகவதத்தில் காணப்படுகிறது.

ஆனால் துரியோதனன் முதலான வீரர்கள் யாராவது அப்படிச் செய்தார்களா? கடவுள் மீது உள்ள நம்பிக்கையை விட, தங்கள் பலத்தில் அவர்களுக்கு நம்பிக்கை அதிகம்! அதனால்தான் நேரே வில்லண்டை சென்றார்கள்; அதை நாணேற்றப் பார்த்தார்கள்; திரும்பினார்கள்.

திரு அருள் இல்லையேல் ஒன்றும் நடக்காது. அதற்கு ஆண்டவனை வேண்டிக் கொள்ள வேண்டும் என்பதற்கு இதைவிட வேறு உதாரணம் என்ன வேண்டும்?

ஒக்கூர் நகரத்தார் தாலாட்டு

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ

ஒக்கூருடையார் ஓசந்த குடியுடையார்
காணிப் பொருளுடையார் கல்வாச நாடுடையார்
ஏழுபிரிவுடையார் இளையாற்ற குடியுடையார்
சோழ மகராசா சொன்ன தொரு ஆக்கினைக்கு
தலைகொடுக்க முன்வந்த தாட்டியவார் பேரேனோ
பூவெடுத்து பூசை பண்ணும் புண்ணியவார் பேரேனோ
மலரெடுத்து பூசைபண்ணும் மகராசா பேரேனோ
அரும்பெடுத்து பூசைபண்ணும் அருச்சுனவார் பேரேனோ
சங்கு வச்சு பூசை பண்ணும் தருமருட பேரேனோ

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ

ஊர்த் தாலாட்டு

ஆராரோ ஆரிராரோ
ஆராரோ ஆரிராரோ
கண்ணான கண்ணுமணி – நீ
கை நிறைந்த பொன்னுமணி
எண்ணாத சின்னமணி – நீ
ஏனழுதாய் சொல்லுமணி
யார் யாரோ நிற்கையிலே – நீ
எனைப் பார்த்து ஏனழுதாய்
பேர் கேட்டு நிற்கையிலே – கண்ணே
பேசாமல் ஏனழுதாய் – திரு
ஒற்றியூரில் அழுகின்றாய் – நீ
ஓயாமல் அழுகின்றாய்
துயர் துடைக்க நானிருக்கேன்
எந்த ஊரு சொல்லிவிடு – கண்ணே
உன்னை எப்படியும் சேர்த்திடுவேன்
குழந்தைக்கங்கு யாரிருக்கா
பாட்டுக்குள்ளே ஊரிருக்கே – கண்ணே
பாட்டிலிலே பாலிருக்கே
குடி என்றா ஊரிருக்கும் – கண்ணே
குடியதுவும் ஆறிருக்கே
அரியக்குடி , ஆத்தங்குடி – கண்ணே
ஆள வந்த காரைக்குடி
பனங்குடி, பலவாங்குடி – கண்ணே
கீழ ஒருப் பூங்குடியாம்
எந்தக்குடி உந்தன் குடி – என் கண்ணே
நீயும் கொஞ்சம் பாலைக்குடி
மாமன் குடி எந்தக்குடி – மயிலே
மண்ணின் குருவுக்கு ஆலங்குடி – அவர்
மகிமையை நீயும் தெரிஞ்சுக்கடி
ஊர் என்றா ஊரிருக்கும் ? கண்ணே
அந்த ஊரைச் சொல்லிவிடு
அழுகை கொஞ்சம் நிறுத்திவிடு
ஊரெல்லாம் சொல்லுகிறேன் – அதை
உந்தன் காதில் போட்டுக்கிட்டு
யாரெல்லாம் அங்கு சொந்தமென்று – அவர்
பேரையெல்லாம் சொல்லிக் காட்டு

நகரத்தார் ஊர் நமக்கு – கண்ணே
நல்லதொரு கொட்டகையாம்
ஏனோ சில மறஞ்சிருச்சு
எல்லா ஊருக்கும் கூட்டிப்போறேன் – கண்ணே
எல்லையெல்லாம் காட்டுகிறேன் (ஆராரோ)
கோட்டை என்றா ஊரிருக்கும் ? கண்ணே
கோட்டை என்றால் மூன்றிருக்கே
நாட்டரசன் கோட்டையுண்டு – நல்ல
கண்ணாத்தா சாமியுண்டு
அலவாக் கோட்டை தேவ கோட்டை
அதில் எந்தக் கோட்டை உந்தன் கோட்டை
கோட்டைக்குள்ளே ஊரிருக்கா ?
நாச்சியா புரமதுவா ? – நல்ல
நடராச புரமதுவா
நாச்சியம்மா அங்கிருக்க – நமக்கு
நல்லதெல்லாம் செஞ்சிருக்கா
சொக்க நாத புரமதுவா ? இரண்டும்
லெட்சுமி புரமதுவா?
சோழ புரமதுவா ? சோலைக்கிளி
உன் ஊரதுவா ?
பட்டி என்றா ஊரிருக்கும் – கண்ணே
பட்டி என்றால் முவ்வேழிருக்கே
வேகுப்பட்டி , கல்லுப்பட்டி – நெய்நந்தி
வேந்தம்பட்டி , நற்சாந்து பட்டி
வலையபட்டி , கடியாபட்டி – கம்மா
ஊருக்குள்ளே பத்திருக்கே
கண்டனூரா , பள்ளத்தூரா – கண்ணே
கான்வென்ட்டுக் கோட்டையூரா ?
அது இல்ல வெற்றியூரா ?
அமராவதிப் புதூரா – கண்ணே
அதற்கடுத்த ஒக்கூரா ?
எந்த ஊரு உன் ஊரு – உனக்கு
ஐயா யாரு ? ஐயா யாரு ? – கண்ணே
அவர்களுக்கும் சொந்தம் யாரு
அத்தை ஊரு எந்த ஊரு – அன்பு
அண்ணன் தம்பி அவராரு
மாமாவுக்கும் என்ன தொழில்?
அவர் மலயாவுக்குப் போனவரா
ஐயாவுக்கும் என்ன தொழில் – அவர்
வட்டிக் கடை வைத்தவரா?

புரம் என்றா ஊரிருக்கும் ? கண்ணே
புரம் கூட ஆறிருக்கே
புரி என்றா உன் ஊரிருக்கும் – கண்ணே
புரி கூட நாலிருக்கே
அழகாபுரி மூணிருக்கே – மேலச்
சீவல்புரி ஒன்றிருக்கே
எந்தப்புரி உந்தன் புரி – கண்ணே
எடுத்துச் சொல்லி கொஞ்சம் சிரி
கடைத் தெருவும் கூட்டிப் போறேன்
கண்டதெல்லாம் வாங்கித் தாரேன்
ஊரைமட்டும் நீயுஞ் சொல்லு
உலகமெல்லாம் வாங்கித் தாரேன்
வயலென்றா ஊரிருக்கும்? சின்ன
வண்ணக்கிளி குறி சொல்லு
வயலென்றால் ஐந்திருக்கே – அதில்
கண்டவராயன் பட்டி
உலகப் புகழ் பிள்ளையார் பட்டி
உருகிப் பக்தர் பாடும் பட்டி
மகிபாலன் பட்டி , பனையபட்டி
மதகுபட்டி, மிதிலைப் பட்டி
மறுகா ஒருபட்டி சின்னக் குட்டி
குருவிக் கொண்டான் பட்டி, ஒருபட்டி
சிறுகூடற் பட்டி கூடக் கண்ணே
கீழச்சிவற் பட்டியுண்டு
சிறு பூவே அழுகாதே – ஊருக்கு
நாம் சிங்காரித்துச் செல்லலாமே
தேனிபட்டி, ஆவணிப்பட்டி
பொன்னாம் புதுப்பட்டி – பொறு
பொறு கொப்பனாபட்டி
ஊருக்கெல்லாம் கடைசியிலே
உலகம்பட்டி தானிருக்கு – இதில்
எந்தப் பட்டி உந்தன் பட்டி
எடுத்துச் சொல்லு வெல்லக்கட்டி
எடுத்துச் சொல்லு வெல்லக்கட்டி
அப்பச்சிக்கும் என்ன பேரு ? அன்பு
ஆத்தாவுக்கும் என்ன பேரு?
இப்படியே நீ யழுதா
எப்படி நான் என்ன செய்வேன் ?
சிரி என்றால் சிரிப்பாயோ ? – நீ
சரி என்று இருப்பாயோ ?

சிலையென்றால் விரயாச்சிலை – சின்ன
கண்ணே நீயும் ஒரு தங்கச் சிலை
குளம் என்றால் கருங்குளமே – நீயும்
விட்ட கண்ணீர்பெருங்குளமே
ஸ்ரீ ராமர் துணையிருப்பார் – கண்ணே
வரப்பெல்லாம் நெல்லிருக்கே
சிறு வயலும் ரெண்டிருக்கே
கண்ணே சிராவயலும் ஒன்றிருக்கே
புது வயல் , ஆராவயல் – இதில்
எந்த வயல் உந்தன் வயல்
மங்கலமா உந்தன் ஊரும்
மயக்கம் விட்டு நீயுஞ் சொல்லு
மங்கலமே என்ன சொல்ல ?
கொத்த மங்கலமாம் அது ஒன்று
பட்ட மங்கலமாம் அது ஒன்று
கடைசியிலே வந்ததாம் – கண்ணே
காளையார் மங்கலமாம்
விடையென்ன விடையென்ன ? கண்ணே
விடுகதையைப் போலாச்சே
இடையென்ன கடையென்ன – கண்ணே
முதலென்ன உன் ஊராச்சே
கண்ணுமணி சிவந்திருச்சே
சின்னக் கருத்தமணி சோர்ந்திருச்சே
இன்னும் சில ஊரிருக்கே – அவை
எல்லாம் ஒன்று தானிருக்கே
வரம் என்றால் இராயவரம் – நீயும்
வாங்கி வந்த நல்ல வரம்
ஏரி என்றால் பாகனேரி – என்றும்
நீ உயர வேண்டும் படி ஏறி
உரித்துப் பழம் தின்ன வேண்டும்
உனக்கு உறிஞ்சிடவே ஜீஸிருக்கு
சிரித்தபடி கண்ணுறங்கு என்
சின்னக் கண்ணே கண்ணுறங்கு
சீதையாரும் துணையிருப்பார்
ஒரு விரா மதியாம்
பூப்பூக்கும் குளிபிறையாம்

அரிமழமாம் , ராங்கியமாம்
ஆனா முத்துப் பட்டினமாம்
கண்டர மாணிக்கமாம் – கல்லல்
கானாடு காத்தானாம்
கோனாபட்டு , நெற்குப்பை – அடுத்த
மானகிரி சக்கந்தி
காஞ்சிப் பட்டு கண்ணுமணி – நீயும்
கை நிறைந்த செவ்வந்தி
நகரத்தார் ஊர் நமக்கு
நல்ல தொரு வட்டகையாம்
நகரத்தார் நாம் வாழ – அவை
நல்ல தொரு கொட்டகையாம்
கோயில் பல இங்கிருக்கு – கண்ணே
கோபுரங்கள் உயர்ந்திருக்கு
கோமகனே ஊருனக்குக்
கோட்டைக் குள்ளா ஒளிந்திருக்கு
நகரத்தார் ஊர் நமக்கு
எழுபத்தாறு தானிருக்கு
உலகத்தார் போற்றும்படி
நமக்கு நல்ல பேரிருக்கு
மொத்தம் ஊரு எழுபத்தாறு
அதில் உந்தன் ஊரை நினைத்துக் கூறு
மோகனமே சொல்லி விடு – உன்னை
மொதல்ல கொண்டு சேர்த்திடுவேன்
வாகனமே சொல்லி விடு – உன்னை
வாடாமல் சேர்த்திருவேன்
சின்னக்காரு ஒன்றிருக்கு – அதில்
சீக்கிரமே சென்றிடலாம்
வண்ணக்காரு ரெண்டிருக்கு – ஒன்றை
வாடகைக்கு எடுத்திறலாம்.
ஸ்ரீ தேவி துணையிருப்பார்
ஸ்ரீனிவாசன் துணையிருப்பார்
ஸ்ரீ கிருஷ்ணர் துணையிருப்பார் – கண்ணே
சிவசக்தி துணையிருப்பார்
சின்ன முத்தே கண்ணுறங்கு – எந்தன்
சிப்பி முத்தே கண்ணுறங்கு

நன்றி : அழ. தையல்நாயகி B.Sc., (M.Phil)
திருவொற்றியூர்

திசையெல்லாம் தொழில் வளர்த்தோம்
திருப்பணியால் சிறப்புப் பெற்றோம்

ஆன்ற தமிழர் அருங்குணத்தி லேமிதந்து
தோன்றுந் திசையெங்கும் தொழில்புரிந்த காலமுதல்
ஈன்ற மனையரசு இல்லத்தாள், பெற்றபிள்ளை
யாவும் மறந்து அயலகத்தே தமிழ் வளர்த்தோம்
வண்ணக் கலைவளர்த்தோம் வரலாறே நாம் சமைத்தோம்
எண்ணத் தொலையாத எத்தனையோ கோவில்களை(க்)
கண்ணில் இருத்திக் கலையோடு காத்துவந்தோம்
காசி நகரத்துக் கடவுளரைப் பேச வைத்தால்
காவிரிப்பூம் பட்டனத்தார் கலையுணர்ச்சி தோன்றவரும்
மாசற்ற பொன்னும் மணிவயிரம் ரத்தினமும்
தூசென்று எண்ணித் தூக்கிக் கொடுத்துவந்தோம்
பண்டைத் தமிழ்மரபைப் பண்போடு காத்துவந்தோம்
அண்டை நிலங்களில்நம் ஆண்டவனை ஊன்றிவைத்தோம்
காசிவிசாலாட்சி மதுரை மீனாட்சி
கட்டியுள்ள ஆடைகளும் கழுத்திலுள்ள பொன்னகையும்
சுற்றியுள்ள மண்டபமும் தூக்கிவரும் வாகனமும்
முற்றும் அழியாத மொட்டைக்கோ புரத்தழகும்
அண்ணா மலையில் அமர்ந்திருக்கும் பேரழகும்
ஆக்கிக் கொடுத்தவர்கள் அமர்ந்திருந்து காத்தவர்கள்
நாட்டுக்கோட்டை வளர்த்த நகரத்தார் அல்லவோ
பக்திக்குத் தானா பணத்தைச் செலவழித்தோம்
பகுத்தறிவுத் கோவில்களாம் பள்ளிகளும் நாம் சமைத்தோம்
பல்கலையும் ஆற்றிவரும் வண்ணப்பல் கலைக்கழகம்
செல்வம் வளர்த்துவரும் செட்டிமார் வண்ணமன்றோ
வட்டி வணிகன் வளமார் தமிழகத்தில்
கொட்டிக் குவித்ததொரு கோடியிலும் மேலாகும்
அன்று பிறகலைகள் அறியா திருந்தவர்கள்
இன்று புவிமுழுதும் எத்தனையோ தொழில் புரிவார்
பழந்தமிழின் இலக்கியமும் பண்புமிகும் நூலினமும்
இழந்துவிடா திருப்பதற்கு எத்தனையோ நூல்நிலையம்
நாமே நடத்துகின்றோம் நாட்டறிவை ஏற்றுகின்றோம்
வழக்கறிஞர் நூறு மருத்துவரோ இருநூறு
வளரும் பொறிஇயலில் மலர்ந்தவரோ நானூறு
கிழக்குமேற்கும் அறிந்து, கேட்போர்க்குப் பதிலுரைக்கும்

தத்துவமும் நம்மக்கள் சமுதாயம் கண்டதுண்டு
பர்மா நிலத்தில் பச்சைவயல் முகங்காட்ட
பச்சை வயலிடையே பச்சரிசி சிரித்திருக்க
அத்தனையும் பொன்னாக ஆக்கிப் படைத்தவர்கள்
நம்மவரே என்றால் நாட்டோர் மறுப்பதில்லை
ஆனாலும் நம்மவர்கள் அடக்கத்தால் இன்றுவரை
தாமாகத் தம்மை தலை தூக்கிக் கொண்டதில்லை
இன்று விழித்துவிட்டோம் எல்லோரும் ஒன்றுபட்டோம்
ஒன்று சமுதாயம் என்றுவரும் நாள்வரையும்
தத்தமது சாதியினைச் சாதியினர் போற்றுமட்டும்
சபையில் முழக்கிடுவோர் சாதிக்க வாழுமட்டும்
நாமும் நமதுகுலம் நலங்காணப் போரிடுவோம்
நகரத்தார் நவஉலகை நாளைக்கே நாம்சமைப்போம்

– கவியரசு கண்ணதாசன்

(காசி நாட்டுக் கோட்டை நகரச் சத்திரம் நூற்றாண்டு விழா மலர்)

தான பலன்கள்

1. வஸ்த்ரதானம் – ஆயுள் விருத்தி
2. பூமிதானம் – பிரம்ம லோக பதவி
3. கோதானம் – ரிஷிக்கடன் , தேவகடன், பித்ருகடன் போக்கும்
4. நெல்லிக்காய்தானம் – ஞாலத்தைக் கொடுக்கும்
5. கோவிலில் தீபதானம் – சக்ரவர்த்தி பதவி கிட்டும்
6. தீப தானம் – கண் பார்வை விருத்தி
7. விதைதானம் – தீர்க்க ஆயுள்
8. அரிசி – பாவம் போக்கும்
9. தாம்பூலம் பழம் – சொர்க்க பதவி
10. கம்பளி தானம் – வாயுரோகம் தீரும்
11. பருத்தி – குஷ்டம் அகலும்
12. பூணூல் – பிராம்மண ஜன்மம் கிடைக்கும்
13. புஷ்பம் துளசி – சொர்க்கம்
14. கறிகாய் தான்யம் – சொர்க்கம்
15. நெய் – ரோக நிவர்த்தி
16. சர்க்கரை – ஆயுள் விருத்தி
17. பால் – துக்கம் அகலும்
18. எள் – எமபயம் அகலும்
19. கடலை – ஸந்தான ஏழ்மை அகலும்
20. ஸ்வர்ணம் (தங்கம்) – பாபம் ஏழ்மை அகலும்
21. குடை, பாதுகை – எமலோகத்தில் சுகம் தரும்
22. கன்யாதானம் – பிரம்மலோக பதவி தரும்
23. ஜபமாலை, ஆசனம் – நல்ல ஆன்மாவை அளிக்கும்
24. விபூதி சந்தனம் – நல்ல ஆன்மாவை அளிக்கும்
25. அன்னதானம் – சொர்க்கம்

தரித்திரத்தை தவிர்ப்பது எப்படி?

1. ஒருவருக்கு பணம் கொடுக்க வேண்டுமென்றால் வாசல்படியில் நின்று கொடுக்க கூடாது. கொடுப்பவரும், வாங்குபவரும் வாசல் படிக்கு உள்ளே இருந்து வாங்க வேண்டும். அல்லது கீழே இறங்கிவாங்க வேண்டும்.

2. வாசற்படி, உரல், ஆட்டுக்கல், அம்மி இவைகளில் உட்காரக் கூடாது.

3. இரவு நேரங்களில் பால், மோர், தண்ணீர் அடுத்தவர்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கக் கூடாது.

4. வெற்றிலை, வாழையிலை இவைகளை வாட விடக்கூடாது.

5. குத்துவிளக்கை தானாக அணையவும் விடக்கூடாது. ஊதியும் அணைக்கக்கூடாது. புஷ்பத்தினால் அணைக்க வேண்டும்.

6. வீட்டில் யாரையும் சனியனே என்று திட்டக்கூடாது. எழவு என்றும் கூறக்கூடாது.

7. அதிகமாகக் கிழிந்த துணிகளை உடுத்தக்கூடாது.

8. உப்பைத் தரையில் சிந்தக்கூடாது. அரிசியைக் கழுவும் போத தரையில் சிந்கத் கூடாது.

லக்ஷ்மி கடாட்சம்பெருக

1. அதிகாலை 5.00 மணிக்கு கொல்லைப்புற வாசலைத் திறந்து வைத்து அதன் பின்னரே தலை வாசலைத் திறக்க வேண்டும்.
2. அதிகாலை விழித்தவுடன் பசுவையாவது, தன் முகத்தையாவது, தன் வலது உள்ளங்கையையாவது முதலில் பார்த்து விட வேண்டும்.
3. செவ்வாய், வெள்ளிக்கு 5 முகம் கொண்ட குத்து விளக்கு ஏற்றி திருமகளை வழிபட வேண்டும்.
4. வீட்டுக்கு வரும் சுமங்கலிப் பெண்களுக்கு குங்குமமும், தண்ணீரும் வழங்க வேண்டும். அவர்களுக்கு மஞ்சள் கிழங்கு கொடுப்பதால் பல ஜென்மங்களில் செய்த பாவங்கள் விலகி பாக்கியங்களும் பொருளும், சந்தோஷமும் பெருகும்.
5. ஒவ்வொரு பௌர்ணமி அன்று மாலை குளித்து சத்யநாராயணரை துளசி, செண்பக மலர் இவைகளால் அர்ச்சித்து, பால், பாயாசம், கல்கண்டு, கனி வகை வைத்து வணங்கிய பின்னரே இரவு உணவு உண்ண வேண்டும்.
6. வைரம். வெள்ளி பாத்திரங்கள் லக்ஷ்மி கடாட்சம் உள்ளவர்களுக்கே கிடைக்கும். ஒருவர் தனக்குச் சீராக அளிக்கப்பட்ட மேற்கூறியவற்றைத் தனது ஜீவித காலத்தில் விற்கவோ, தன் பிள்ளைகளுக்கே கூட அன்பளிப்பாகவும் கொடுக்கக் கூடாது. தன் காலத்திற்குப் பின்னரே அவர்களுக்குச் சேரவேண்டும். முடிந்தால் அவர்களுக்கு புதியதாக வாங்கிக் கொடுக்கலாம்.

உங்கள் சிந்தனைக்கு

1.	மிக மிக நல்ல நாள்	–	இன்று
2.	மிகப் பெரிய வெகுமதி	–	மன்னிப்பு
3.	மிகவும் வேண்டாதது	–	வெறுப்பு
4.	மிகப் கொடிய நோய்	–	பேராசை
5.	மிகப் பெரிய தேவை	–	சமயோஜிதப்புத்தி
6.	மிகவும் சுலபமானது	–	குற்றம் காணல்
7.	கீழ்த்தரமான விஷயம்	–	பொறாமைப்படுதல்
8.	நம்பக்கூடாதது	–	வதந்திகளை
9.	ஆபத்தை விளைவிப்பது	–	அதிக பேச்சுகள்
10.	செய்யக் கூடாதது	–	உபதேசம்
11.	செய்ய வேண்டியது	–	உதவி
12.	விலக்க வேண்டியது	–	விவாதம்
13.	உயர்வுக்கு வழி	–	உழைப்புகள்
14.	நழுவ விடக் கூடாதது	–	வாய்ப்புகள்

விருந்தாளி திருப்தியடையாமல் ஒரு வீட்டிலிருந்து சென்றால் தன் பாவங்களை அங்கு விட்டு விட்டு அங்கிருப்பவர்களின் புண்ணியத்தை எடுத்துச் செல்கிறான். நீங்கள் மற்றவர்களுக்குச் செய்யும் உதவிகளை எப்போதும் மறந்து விடுங்கள் மற்றவர்கள் உங்களுக்குச் செய்யும் உதவிகளை ஒரு போதும் மறவாதீர்கள்.

தொகுப்பு : ராம. மணிகண்டன், தேவகோட்டை

கூடாது ஒன்பது

1. குடும்பத்தின் சுகங்களையோ, துக்கங்களையோ பிறரிடம் சொல்லக்கூடாது.
2. அதுபோல வறுமையைப் பற்றியும் கூறக் கூடாது.
3. நம்முடைய நோய் நொடிகளை விவரிக்கக் கூடாது.
4. எடுக்கின்ற விரதங்களைப் பற்றி பெருமைப்படக் கூடாது.
5. நேர்ந்த அவமானத்தை வெளியிடக் கூடாது.
6. அயோக்கியர்களின் சாகசத்தைக் கண்டு இரக்கப்பட்டு விடக்கூடாது.
7. ஆசிரியர் தாய் தந்தை இம்மூவரையும் விரோதிக்கக் கூடாது விரோதத்தால் அவர்களைக் காப்பாற்ற வில்லையானால் மகாபாவம் வந்து சேரும்.
8. பெண்கள் நெற்றியில் பொட்டு வைக்காமல் இருக்கக்கூடாது.
9. பழைய பண்பாடுகளை பழமொழிகளை மறந்து விடவும் கூடாது அவைகளை அலட்சியமாக எண்ணுவதும் கூடாது.

நகரத்தார் சில சுவையான செய்திகள் சில மரபுகள்

ஒரு கூட்டம் நடக்கிறது "யார் யார் வரவில்லை"? என்று கேட்க மாட்டார்கள். "யார் யார் வரவேண்டும்? என்றுதான் கேட்பார்கள்.

"வீட்டிற்கு வந்தால் "வாருங்கள்" என்று கூற மாட்டார்கள் "வந்தியளா" என்பார்கள்.

ஒரு கூட்டம் கலைந்தது. முடிந்தது என்று கூறாமல் "கூட்டத்தைப் பெருக்கிக் கொண்டோம்" என்பார்கள்.

1. தம்மில் உயர்ந்தோருக்கு எழுதும் போது அண்ணாமலை எழுதிக் கொண்டது. இதைப் போலவே அனுப்பச் செய்ய வேண்டியது – மரியாதை
2. தமக்குச் சமமானவருக்கு எழுதும் போது – அண்ணாமலை எழுதிக் கொள்வது. அனுப்ப வேண்டியது – சமநிலை
3. தமக்குக் கீழ்நிலையில் உள்ளவர்க்கு எழுதும் போது – அண்ணாமலை எழுதியது. அனுப்பவும் – கீழ்நிலை.

பண்பாட்டுக் காவலர்கள்

நகரத்தார் சமூகத்தினர் அன்றும் இன்றும் பண்பாட்டுக் காவலர்களாக விளங்கி வந்தவர்கள்.

விளங்கி வருகின்றவர்கள் பண்பாட்டுச் செல்வமாகிய அருட் செல்வத்தையும் வளர்க்கும் சமூகம் இது.

மரியாதை, வாக்கு நாணயம், முயற்சி, திரை கடலோடித் திரவியம் தேடுதல், தமிழ் வளர்ச்சி, கோயில் திருப்பணிகள் ஆகியவற்றிற்கு இச்சமூகம் முன்னுதாரணமாகக் காட்சியளிக்கிறது. முழு உதாரணமாகவும் திழ்கிறது.

தமிழகத்தில் மட்டுமல்லாமல் இலங்கை, மலேசியா, பர்மா, வியட்நாம் போன்ற தென் கிழக்காசியப் பகுதிகளுக்கும் தமிழ்க் கலாசாரத்தைக் கொண்டு சென்று பரப்பி நிலைநிறுத்திய பெருமை இச்சமூகத்திற்குரியது.

உத்தமராம் தனவணிகர் குலத்துதித்த
இளைஞர் பலர் ஊக்கம் மிக்கார்
உண்மையே தாரகம் என்று உணர்ந்திட்டார்
அன்பு ஒன்றே உறுதி என்பார்
வண்மையே குலதர்மமெனக் கொண்டார்
தொண்டொன்றே வழியாகக் கண்டார்
ஒண்மையுயர் கடவுளிடத் தன்புடையார்
பல நூல்கள் பதிப்பித்தும் பல பெரியோர்
பிரசங்கம் பண்ணுவித்தும்
நலமுடைய கலாசாலை புத்தக சாலை
பலவும் நாட்டியும் தம்
குலமுயற நகருயர நாடுயர உழைக்கின்றார்."

என்று பாரதி புகழ்ந்த இச்சமூகத்தார் கல்வி, கலைகள், தமிழிசை, இலக்கியம், புத்தகப் பிசுரத் தொழில் ஆகிய முக்கியமான துறைகளுக்குச் செய்து வரும் தொண்டுகளை வணங்கி வாழ்த்துகின்றோம். நகரத்தார் புதுக்கணக்குத் தொடங்கும்.

பிரதோஷ மகிமையும் தத்துவமும்

பிரதோஷம் என்பது ஐந்து வகைப்படும்.

(1) நித்ய பிரதோஷம் (2) படசபிரதோஷம் (3) மாத பிரதோஷம் (4) மகா பிரதோஷம் (5) உத்தம மகா பிரதோஷம் என்று பிரதோஷம் ஐந்து வகைப்படும்.

1. நித்தியம் மாலை சூரிய அஸதமனத்துக்கு முன்னும் பின்னும் மூனறே முக்கால் நாழிகை வரை ஏழரை நாழிகை நித்ய பிரதோஷம்.
2. சுக்ல பட்சதிரயோதசியில் வருவது பட்சபிரதோஷம்
3. தேய்பிறை திரயோதசியில் வருவது மாதபிரதோஷம்
4. சனிக்கிழமைகளில் வருவது மகாபிரதோஷம்
5. வளர்பிறை திரயோதசியுடன் கூடிய சனிக்கிழமையில் வருவது உத்தம மகா பிரதோஷம் ஆகும். மகா பிரதோஷம் மூன்று வகைப்படும்.

1) உத்தம மகா பிரதோஷம்
2) மத்யம மகா பிரதோஷம்
3) மகா பிரதோஷம்

பிரதோஷம் என்பது சிவனும் சக்தியும் சேர்ந்து இணையும் ஆனந்த காலம். அதாவது சிவசக்தியின் இரண்டு கண்களான சூரியனும் சந்திரனும் சேரும் நேரம் ஆகும். தோஷத்துக்கு ஒரு தோஷம் கொண்டு வரும் நேரம் பிரதோஷம். விதிக்கும் ஒரு விதி கொண்டுவரும் நேரம் பிரதோஷம் ஆகும்.



காவிரிபோல் வளர்வோம்

ஆக்கம் : கவியரசு கண்ணதாசன்

அள்ளிக் கொடுப்பதில் வல்லமை பெற்றவன்
அப்பன் பழநி யப்பன் – தினம்
அச்சம் தவிர்ப்பவன் ஆறுதல் சொல்பவன்
அப்பன் பழநி யப்பன்

கள்ளம் கபடம் இல்லாதவர் தம்மிடம்
காவலில் நின்றி ருப்பான் – அங்குக்
கால்நடை யாய்வரும் மானிட ஜாதியைக்
கண்டு களித் திருப்பான்.

துள்ளி வரும்வடி வேலுக்கு மேலோரு
ஜோதிப் பிழம்பு முண்டோ? – அந்த
சுப்பையன் போலொரு அற்புதத் தெய்வத்தைச்
சொல்ல மொழியுமுண்டோ?

வெள்ளி முகம்பனி ரண்டையும் கண்டபின்
வேறொரு சொர்க்க முண்டோ? – ஆண்டி
வேடத்தி லாயினும் வீரத்தி லாயினும்
வேலனை வெல்வ துண்டோ?

சித்தர் வணங்கிய சேவற் கொடியோனை
சேர்ந்து வணங்கி டுவோம் – அந்தச்
சிக்கலி லாயினும் செந்திலி லாயினும்
சென்று களித்து நிற்போம்

பக்தருக் கென்று திறந்திருக்கும் தென்
பழநியைக் கண்டு கொள்வோம் – அங்குப்
பாலாபிஷேகமும் தேனாபிஷேகமும்
செய்து பணிந்தி டுவோம்.

செட்டிமுருகன் எனும் பெயர் பெற்றவன்
தெண்டாயுதமல்லவோ – அந்தச்
சித்திர வள்ளியும் ஜாடையில் மற்றொரு
செட்டி மகளல் லவோ.

கொட்டிக் கொடுப்பவன் கோவிலைப் பார்த்திடக்
கோஷமிட்டோ டிடுவோம் – முள்ளும்
குத்தட்டுமே கல்லும் தட்டட் டுமே வலி
கொஞ்சமும் கண்டு கொள் ளோம்.

ஆறும் அறுபதும் ஆன இருபதும்
ஆடி நடந்து செல்வோம் – சில
ஆனந்தப் பாடல்கள் வேலனைப் பாராட்டும்
அன்புடன் ஊர்ந்து செல்வோம்.

ஊறுகள் நேரட்டும் உமையவள் மைந்தனை
உச்சத் தில் வைத்திருப்போம் – கையில்
உள்ளதை அன்னவன் கோயிலுக்கே தந்து
மிச்சத் தில் வாழ்ந் திருப்போம்.

வேலன் முருகன் குமரன் திருச் செந்தில்
வேட்டுவன் கந்தனுக்கு – இரு
கால்கள் நடக்கின்ற நடையினில் தான் உயர்
கனிவு நிறைந்தி ருக்கு.

காலம் வழிவிடும் கச்சிதமாய்ச் சென்று
கால்க ளிலேவி ழுவோம் – அவன்
கால்க ளிலேவிழக் கால்கள் நடக்கட்டும்
காவிரி போல் வளர்வோம்.!

